Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

# tirunAvukkaracar tEvAram - tirumuRai 5 part 2, verses (510 -1016) (in tamil script, unicode format)

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த
தேவாரப் பதிகங்கள்
ஐந்தாம் திருமுறை இரண்டாம் பகுதி
பாடல்கள் **( 510 -1016 )**

Acknowledgements:
Etext preparation (romanized/transliteration format) : Dr. Thomas Malten and Colleagues,

Institute of Indology and Tamil Studies, Univ of Koeln Germany.
Our sincere thanks go to Mr.Mani Manivannan, Fremont, CA, USA for providing us with a
Text Convertor that allowed conversion of romanized version to Tamil script version as per TSCII encoding.
Proof-reading and addition of brief comments: Mr. P.K. Ilango, Erode, Tamilnadu, India
Web version: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland
PDF version: Mr. P.I.Arasu, Toronto, ON, Canada.

This webpage presents the Etext in Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha,

Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer
and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages
(Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil font chosen as the default font for the UTF-8 char-set/encoding view.
. In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

© Project Madurai 1999 - 2004
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of
electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்
## ஐந்தாம் திருமுறை இரண்டாம் பகுதி பாடல்கள் (510 - 1006)

உள்ளுறை


| | | |
|---|---|---|
| 5.051 | திருப்பாலைத்துறை | (510-520) |
| 5.052 | திருநாகேச்சரம் | (521-530) |
| 5.053 | திருவதிகைவீரட்டம் | (531-542) |
| 5.054 | திருவதிகைவீரட்டம் | (543-552) |

5.055 திருநாரையூர் (553-562)

5.056 திருக்கோளிலி (563-572)

5.057 திருக்கோளிலி (573-582)

5.058 திருப்பழையாறைவடதளி (583-592)

5.059 திருமாற்பேறு (593-601)

5.060 திருமாற்பேறு (601-610)

5.061 திருஅரிசிற்கரைப்புத்தூர் (611-620)

5.062 திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் (621-630)

5.063 திருக்குரங்காடுதுறை (631-641)

5.064 திருக்கோழம்பம் (642-652)

5.065 திருப்பூவனூர் (653-663)
5.066 திருவலஞ்சுழி (664-673)
5.067 திருவாஞ்சியம் (674-680)
5.068 திருநள்ளாறு (681-690)
5.069 திருக்கருவிலி (691-700)
5.070 திருக்கொண்டீச்சரம் (701-710)
5.071 திருவிசயமங்கை (711-720)
5.072 திருநீலக்குடி (721-730)
5.073 திருமங்கலக்குடி (731-740)
5.074 திருஎறும்பியூர் (741-750)

| | | |
|---|---|---|
| 5.075 | திருக்குரக்குக்கா | (751-760) |
| 5.076 | திருக்கானூர் | (761-769) |
| 5.077 | திருச்சேறை | (770-779) |
| 5.078 | திருக்கோடிகா | (780-786) |
| 5.079 | திருப்புள்ளிருக்குவேளூர் | (787-795) |
| 5.080 | திருஅன்பில்ஆலந்துறை | (796-805) |
| 5.081 | திருப்பாண்டிக்கொடுமுடி | (806-810) |
| 5.082 | திருவான்மியூர் | (811-820) |
| 5.083 | திருநாகைக்காரோணம் | (821-830) |
| 5.084 | திருக்காட்டுப்பள்ளி | (831- |

840)

5.085 திருச்சிராப்பள்ளி (841-844)

5.086 திருவாட்போக்கி (845-854)

5.087 திருமணஞ்சேரி (855-864)

5.088 திருமருகல் (865-874)

5.089 தனி (875-884)

5.090 தனி (885-894)

5.091 தனி (895-900)

5.092 காலபாராயணம் (901-914)

5.093 மறக்கிற்பனே என்னும் (915-924)

5.094 தொழற்பாலனம் என்னும் (925-935)
5.095 இலிங்கபுராணம் (936-946)
5.096 மனத்தொகை (947-956)
5.097 சித்தத்தொகை (957-986)
5.098 உள்ளம் (987-996)
5.099 பாவநாசம் (997-1006)
5.100 ஆதிபுராணம் (1007-1016)

---

## **5.51** திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

510 நீல மாமணி கண்டத்தர்
நீள்சடைக்
கோல மாமதி கங்கையுங்
கூட்டினார்
சூல மான்மழு வேந்திச்
சுடர்முடிப்
பால்நெய் யாடுவர் பாலைத்
துறையரே. 5.51.1

511 கவள மால்களிற் றின்னுரி
போர்த்தவர்
தவள வெண்ணகை
மங்கையோர் பங்கினர்
திவள வானவர் போற்றித்
திசைதொழும்
பவள மேனியர் பாலைத்
துறையரே.
5.51.2

512 மின்னின் நுண்ணிடைக்
கன்னியர் மிக்கெங்கும்
பொன்னி நீர்மூழ்கிப் போற்றி

யடிதொழ
மன்னி நான்மறை யோடுபல்
கீதமும்
பன்னி னாரவர் பாலைத் 5.51.3
துறையரே.

513 நீடு காடிட மாய்நின்ற
பேய்க்கணங்
கூடு பூதங் குழுமிநின்
றார்க்கவே
ஆடி னாரழ காகிய
நான்மறை
பாடி னாரவர் பாலைத்
துறையரே. 5.51.4

514 சித்தர் கன்னியர் தேவர்கள்
தானவர்
பித்தர் நான்மறை வேதியர்
பேணிய
அத்த னேநமை யாளுடை
யாயெனும்
பத்தர் கட்கன்பர் பாலைத்
துறையரே. 5.51.5

515 விண்ணி னார்பணிந் தேத்த

வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி
வாயவென்
றெண்ணி னார்க்கிட
மாவெழின் வானகம்
பண்ணி னாரவர் பாலைத்
துறையரே. 5.51.6

516 குரவ னார்கொடு
கொட்டியுங் கொக்கரை
விரவி னார்பண் கெழுமிய
வீணையும்
மருவு நாண்மலர் மல்லிகை
செண்பகம்
பரவு நீர்ப்பொன்னிப்
பாலைத் துறையரே. 5.51.7

517 தொடருந் தொண்டரைத்
துக்கந் தொடர்ந்துவந்
தடரும் போதர னாயருள்
செய்பவர்
கடலின் நஞ்சணி கண்டர்
கடிபுனற்
படருஞ் செஞ்சடைப்

பாலைத் துறையரே. 5.51.8

518 மேகந் தோய்பிறை சூடுவர்
மேகலை
நாகந் தோய்ந்த அரையினர்
நல்லியற்
போகந் தோய்ந்த
புணர்முலை மங்கையோர்
பாகந் தோய்ந்தவர் பாலைத்
துறையரே. 5.51.9

519 வெங்கண் வாளர வாட்டி
வெருட்டுவர்
அங்க ணாரடி யார்க்கருள்
நல்குவர்
செங்கண் மாலயன் தேடற்
கரியவர்
பைங்கண் ஏற்றினர் பாலைத்
துறையரே. 5.51.10

520 உரத்தி னாலரக் கன்னுயர்
மாமலை
நெருக்கி னானை
நெரித்தவன் பாடலும்

இரக்க மாவருள் செய்தபா
லைத்துறைக்
கரத்தி னாற்றொழு
வார்வினை யோயுமே. 5.51.11

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பாலைவனநாதர்,
தேவியார் - தவளவெண்ணகையம்மை.

திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## 5.52 திருநாகேச்சரம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

521 நல்லர் நல்லதோர்
நாகங்கொண் டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும்

மருந்துகள்
பல்லில் ஓடுகை யேந்திப்
பலிதிரி
செல்வர் போல்திரு நாகேச்
சரவரே. 5.52.1
522 நாவ லம்பெருந் தீவினில்
வாழ்பவர்
மேவி வந்து வணங்கி
வினையொடு
பாவ மாயின பற்றறு
வித்திடுந்
தேவர் போல்திரு நாகேச்
சரவரே. 5.52.2
523 ஓத மார்கட லின்விட
முண்டவர்
ஆதி யார்அய னோடம
ரர்க்கெலாம்
மாதோர் கூறர் மழுவல
னேந்திய
நாதர் போல்திரு நாகேச்
சரவரே. 5.52.3
524 சந்தி ரன்னொடு சூரியர்

தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள்
செய்தபின்
ஐந்த லையர வின்பணி
கொண்டருள்
மைந்தர் போல்மணி நாகேச்
சரவரே. 5.52.4

525 பண்டோ ர் நாளிகழ்
வான்பழித் தக்கனார்
கொண்ட வேள்விக்
குமண்டை யதுகெடத்
தண்ட மாவிதா தாவின்
றலைகொண்ட
செண்டர் போல்திரு நாகேச்
சரவரே. 5.52.5

526 வம்பு பூங்குழல் மாது
மறுகவோர்
கம்ப யானை யுரித்த
கரத்தினர்
செம்பொ னாரித ழிம்மலர்ச்
செஞ்சடை
நம்பர் போல்திரு நாகேச்

சரவரே. 5.52.6

527 மானை யேந்திய கையினர்
மையறு
ஞானச் சோதியர் தியர்
நாமந்தான்
ஆன அஞ்செழுத் தோதவந்
தண்ணிக்குந்
தேனர் போல்திரு நாகேச்
சரவரே. 5.52.7

528 கழல்கொள் காலினர்
காலனைக் காய்ந்தவர்
தழல்கொள் மேனியர்
சாந்தவெண் ணீறணி
அழகர் ஆல்நிழற் கீழற
மோதிய
குழகர் போல்குளிர் நாகேச்
சரவரே.
5.52.8

529 வட்ட மாமதில் மூன்றுடன்
வல்லரண்
சுட்ட செய்கைய ராகிலுஞ்
சூழ்ந்தவர்

குட்ட வல்வினை தீர்த்துக்
குளிர்விக்குஞ்
சிட்டர் போல்திரு நாகேச்
சரவரே. 5.52.9

530 தூர்த்தன் றோண்முடி தாளுந்
தொலையவே
சேர்த்தி னார்திருப் பாதத்
தொருவிரல்
ஆர்த்து வந்துல கத்தவ
ராடிடுந்
தீர்த்தர் போல்திரு நாகேச்
சரவரே. 5.52.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - செண்பகாரணியேசுவரர்,
தேவியார் - குன்றமுலைநாயகியம்மை.

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

## **5.53** திருவதிகைவீரட்டம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

531 கோணன் மாமதி சூடியோர்
கோவணம்
நாணில் வாழ்க்கை நயந்தும்
பயனிலை
பாணில் வீணை பயின்றவன்
வீரட்டங்
காணில் அல்லதென்
கண்டுயில் கொள்ளுமே. 5.53.1

532 பண்ணி னைப்பவ ளத்திரள்
மாமணி
அண்ண லையம ரர்தொழு
மாதியைச்
சுண்ண வெண்பொடி
யான்றிரு வீரட்டம்
நண்ணி லல்லதென்
கண்டுயில் கொள்ளுமே. 5.53.2

533 உற்ற வர்தம் உறுநோய்
களைபவர்
பெற்ற மேறும் பிறங்கு
சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு
வீரட்டங்
கற்கி லல்லதென் கண்டுயில்
கொள்ளுமே. 5.53.13

534 முற்றா வெண்மதி சூடும்
முதல்வனார்
செற்றார் வாழுந் திரிபுரந்
தீயெழ
விற்றான் கொண்டெயி
லெய்தவர் வீரட்டங்
கற்றா லல்லதென் கண்டுயில்
கொள்ளுமே. 5.53.4

535 பல்லா ரும்பல தேவர்
பணிபவர்
நல்லா ருந்நயந் தேத்தப்
படுபவன்
வில்லால் மூவெயி

லெய்தவன் வீரட்டங்
கல்லே னாகிலென் 5.53.5
கண்டுயில் கொள்ளுமே.

536 வண்டார் கொன்றையும்
மத்தம் வளர்சடைக்
கொண்டான் கோல மதியோ
டரவமும்
விண்டார் மும்மதி
லெய்தவன் வீரட்டங்
கண்டா லல்லதென்
கண்டுயில் கொள்ளுமே. 5.53.6

537 அரையார் கோவண ஆடைய
னாறெலாந்
திரையார் ஒண்புனல்
பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்கு
வீரட்டன்பாற்
கரையே னாகிலென்
கண்டுயில் கொள்ளுமே.
5.53.7

538 நீறு டைத்தடந் தோளுடை
நின்மலன்

ஆறு டைப்புனல் பாய்கெடி
லக்கரை
ஏறு டைக்கொடி யான்றிரு
வீரட்டங்
கூறி லல்லதென் கண்டுயில்
கொள்ளுமே. 5.53.8

539 செங்கண் மால்விடை யேறிய
செல்வனார்
பைங்க ணானையின் ஈருரி
போர்த்தவர்
அங்கண் ஞாலம தாகிய
வீரட்டங்
கங்கு லாகவென் கண்டுயில்
கொள்ளுமே. 5.53.9

540 பூணா ணாரம் பொருந்த
வுடையவர்
நாணா கவ்வரை வில்லிடை
யம்பினாற்
பேணார் மும்மதி லெய்தவன்
வீரட்டங்
காணே னாகிலென்
கண்டுயில் கொள்ளுமே.

5.53.10

541 வரையார்ந் தவயி ரத்திரள்
மாணிக்கந்
திரையார்ந் தபுனல் பாய்கெடி
லக்கரை
விரையார் நீற்றன் விளங்கிய
வீரட்டம்
உரையே னாகிலென்
கண்டுயில் கொள்ளுமே. 5.53.11

542 உலந்தார் வெண்டலை
உண்கல னாகவே
வலந்தான் மிக்கவன் வாளரக்
கன்றனைச்
சிலம்பார் சேவடி
யூன்றினான் வீரட்டம்
புலம்பே னாகிலென்
கண்டுயில் கொள்ளுமே. 5.53.12

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர்,
தேவியார் - திருவதிகைநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

## 5.54 திருவதிகைவீரட்டம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

543 எட்டு நாண்மலர்
கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை
மாயுமாற்
கட்டித் தேன்கலந் தன்ன
கெடிலவீ
ரட்ட னாரடி சேரு மவருக்கே. 5.54.1
544 நீள மாநினைந் தெண்மலர்
இட்டவர்
கோள வல்வினை யுங்குறை
விப்பரால்

வாள மாலிழி யுங்கெடி
லக்கரை
வேளி சூழ்ந்தழ காய
வீரட்டரே. 5.54.2

545 கள்ளின் நாண்மல ரோரிரு
நான்குகொண்
டுள்குவா ரவர் வல்வினை
யோட்டுவார்
தெள்ளு நீர்வயல் பாய்கெடி
லக்கரை
வெள்ளை நீறணி மேனிவீ
ரட்டரே. 5.54.3

546 பூங்கொத் தாயின
மூன்றொடோ ரைந்திட
வாங்கி நின்றவர் வல்வினை
யோட்டுவார்
வீங்கு தண்புனல் பாய்கெடி
லக்கரை
வேங்கைத் தோலுடை
யாடைவீ ரட்டரே. 5.54.4

547 தேனப் போதுகள்
மூன்றொடோ ரைந்துடன்

தானப் போதிடு வார்வினை
தீர்ப்பவர்
மீனத் தண்புனல் பாய்கெடி
லக்கரை
வேன லானை யுரித்தவீ
ரட்டரே. 5.54.5

548 ஏழித் தொன்மலர் கொண்டு
பணிந்தவர்
ஊழித் தொல்வினை யோட
அகற்றுவார்
பாழித் தண்புனல் பாய்கெடி
லக்கரை
வேழத் தின்னுரி போர்த்தவீ
ரட்டரே. 5.54.6

549 உரைசெய் நூல்வழி
யொண்மல ரெட்டிடத்
திரைகள் போல்வரு
வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்திழி யுங்கெடி
லக்கரை
விரைகள் சூழ்ந்தழ காயவீ
ரட்டரே. 5.54.7

550 ஒலி வண்டறை யொண்மல
ரெட்டினாற்
காலை யேத்த வினையைக்
கழிப்பரால்
ஆலி வந்திழி யுங்கெடி
லக்கரை
வேலி சூழ்ந்தழ காயவீ
ரட்டரே. 5.54.8
551 தாரித் துள்ளித் தடமல
ரெட்டினாற்
பாரித் தேத்தவல் லார்வினை
பாற்றுவார்
மூரித் தெண்டிரை பாய்கெடி
லக்கரை
வேரிச் செஞ்சடை வேய்ந்தவீ
ரட்டரே. 5.54.9
552 அட்ட புட்பம் அவைகொளு
மாறுகொண்
டட்ட மூர்த்தி அனாதிதன்
பாலணைந்
தட்டு மாறுசெய் கிற்ப
அதிகைவீ

ரட்ட னாரடி சேரு மவர்களே. 5.54.10

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.55** திருநாரையூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

553 வீறு தானுடை வெற்பன்
மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை
சூடிலும்
நாறு பூம்பொழில் நாரையூர்
நம்பனுக்
காறு சூடலும் அம்ம
அழகிதே. 5.55.1

554 புள்ளி கொண்ட புலியுரி
யாடையும்
வெள்ளி கொண்டவெண்

பூதிமெய் யாடலும்
நள்ளி தெண்டிரை நாரையூ
ரான்நஞ்சை
அள்ளி யுண்டலும் அம்ம
அழகிதே. 5.55.2

555 வேடு தங்கிய வேடமும்
வெண்டலை
ஓடு தங்கிய வுண்பலி
கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ
ரான்நடம்
ஆடு பைங்கழல் அம்ம
அழகிதே.
5.55.3

556 கொக்கின் றூவலுங் கூவிளங்
கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை
விரிசடை
நக்க னாகிலும் நாரையூர்
நம்பனுக்
கக்கி னாரமும் அம்ம
அழகிதே. 5.55.4

557 வடிகொள் வெண்மழு
மானமர் கைகளும்
பொடிகொள் செம்பவ
ளம்புரை மேனியும்
நடிகொள் நன்மயில் சேர்திரு
நாரையூர்
அடிகள் தம்வடி வம்ம
அழகிதே. 5.55.5

558 சூல மல்கிய கையுஞ்
சுடரொடு
பாலு நெய்தயி ராடிய
பான்மையும்
ஞால மல்கிய நாரையூர்
நம்பனுக்
கால நீழலும் அம்ம
அழகிதே. 5.55.6

559 பண்ணி னான்மறை
பாடலொ டாடலும்
எண்ணி லார்புர மூன்றெரி
செய்ததும்
நண்ணி னார்துயர் தீர்த்தலும்

நாரையூர்
அண்ண லார்செய்கை அம்ம 5.55.7
அழகிதே.
560 என்பு பூண்டெரு தேறி
இளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல்
விளங்கவே
நன்ப கற்பலி தேரினும்
நாரையூர்
அன்ப னுக்கது அம்ம
அழகிதே. 5.55.8
561 முரலுங் கின்னரம் மொந்தை
முழங்கவே
இரவி னின்றெரி யாடலு
நீடுவான்
நரலும் வாரிநன் னாரையூர்
நம்பனுக்
கரவும் பூணுதல் அம்ம
அழகிதே. 5.55.9
562 கடுக்கை யஞ்சடை யன்கயி
லைம்மலை
எடுத்த வாளரக் கன்றலை

ஈரைஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ
ரான்விரல்
அடுத்த தன்மையும் அம்ம
அழகிதே. 5.55.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சவுந்தரேசுவரர், தேவியார் - திருபுரசுந்தரநாயகி.
திருச்சிற்றம்பலம்
உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.56 திருக்கோளிலி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

563 மைக்கொள் கண்ணுமை
பங்கினன் மான்மழுத்
தொக்க கையினன்
செய்யதோர் சோதியன்

கொக்க மர்பொழில் சூழ்தரு
கோளிலி
நக்க னைத்தொழ நம்வினை
நாசமே. 5.56.1

564 முத்தி னைமுத லாகிய
மூர்த்தியை
வித்தி னைவிளை வாய
விகிர்தனைக்
கொத்த லர்பொழில் சூழ்தரு
கோளிலி
அத்த னைத்தொழ நீங்கும்நம்
மல்லலே. 5.56.2

565 வெண்டி ரைப்பர வைவிட
முண்டதோர்
கண்ட னைக்கலந் தார்தமக்
கன்பனைக்
கொண்ட லம்பொழிற்
கோளிலி மேவிய
அண்ட னைத்தொழு
வார்க்கல்ல லில்லையே. 5.56.3

566 பலவும் வல்வினை பாறும்
பரிசினால்

உலவுங் கங்கையுந் திங்களும்
ஒண்சடை
குலவி னான்குளி ரும்பொழிற்
கோளிலி
நிலவி னான்றனை நித்தல்
நினைமினே. 5.56.4

567 அல்ல லாயின தீரும் அழகிய
முல்லை வெண்முறு
வல்லுமை யஞ்சவே
கொல்லை யானை யுரித்தவன்
கோளிலிச்
செல்வன் சேவடி சென்று
தொழுமினே.
5.56.5

568 ஆவின் பால்கண் டளவில்
அருந்தவப்
பாலன் வேண்டலுஞ்
செல்லென்று பாற்கடல்
கூவி னான்குளி ரும்பொழிற்
கோளிலி
மேவி னானைத் தொழவினை
வீடுமே. 5.56.6

569 சீர்த்த நன்மனை யாளுஞ்
சிறுவரும்
ஆர்த்த சுற்றமும் பற்றிலை
யாதலாற்
கூத்த னாருறை யுந்திருக்
கோளிலி
ஏத்தி நீர்தொழு மின்னிடர்
தீருமே. 5.56.7
570 மால தாகி மயங்கு
மனிதர்காள்
காலம் வந்து கடைமுடி
யாமுனங்
கோல வார்பொழிற் கோளிலி
மேவிய
நீல கண்டனை நின்று
நினைமினே. 5.56.8
571 கேடு மூடிக் கிடந்துண்ணு
நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி
ஈசனைப்
பாடு மின்னிர வோடு

பகலுமே. 5.56.8

572 மடுத்து மாமலை யேந்தலுற்
றான்றனை
அடர்த்துப் பின்னும் இரங்கி
யவற்கருள்
கொடுத்த வன்னுறை கோளிலி
யேதொழ
விடுத்து நீங்கிடும் மேலை
வினைகளே. 5.56.9

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கோளிலிநாதர், தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை.

திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## 5. 57 திருக்கோளிலி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

573 முன்ன மேநினை யாதொழிந்
தேனுனை
இன்னம் நானுன சேவடி
யேத்திலேன்
செந்நெ லார்வயல் சூழ்திருக்
கோளிலி
மன்ன னேயடி யேனை
மறவலே. 5.57.1

574 விண்ணு ளார்தொழு தேத்தும்
விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கு
மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக்
கோளிலி
அண்ண லாரடி யேதொழு
துய்ம்மினே. 5.57.2

575 நாளும் நம்முடை நாள்கள்
அறிகிலோம்
ஆளும் நோய்களோ
ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர்
நையாதே

கோளி லியரன் பாதமே 5.57.3
கூறுமே.

576 விழவி னோசை ஒலியறாத்
தண்பொழில்
பழகி னார்வினை தீர்க்கும்
பழம்பதி
அழல்கை யானம ருந்திருக்
கோளிலிக்
குழக னார்திருப் பாதமே
கூறுமே. 5.57.4

577 மூல மாகிய மூவர்க்கு
மூர்த்தியைக்
கால னாகிய காலற்குங்
காலனைக்
கோல மாம்பொழில்
சூழ்திருக் கோளிலிச்
சூல பாணிதன் பாதந்
தொழுமினே. 5.57.5

578 காற்ற னைக்கடல் நஞ்சமு
துண்டவெண்
ணீற்ற னைநிமிர் புன்சடை

யண்ணலை
ஆற்ற னையம ருந்திருக்
கோளிலி
ஏற்ற னாரடி யேதொழு 5.57.6
தேத்துமே.

579 வேத மாயவிண் ணோர்கள்
தலைவனை
ஓதி மன்னுயி ரேத்து
மொருவனைக்
கோதி வண்டறை யுந்திருக்
கோளிலி
வேத நாயகன் பாதம்
விரும்புமே. 5.57.7

580 நீதி யாற்றொழு வார்கள்
தலைவனை
வாதை யான விடுக்கும்
மணியினை
கோதி வண்டறை யுந்திருக்
கோளிலி
வேத நாயகன் பாதம்
விரும்புமே. 5.57.8

581 மாலும் நான்முக னாலும்

அறிவொணாப்
பாலின் மென்மொழி
யாளொரு பங்கனைக்
கோல மாம்பொழில்
சூழ்திருக் கோளிலி
நீல கண்டனை நித்தல்
நினைமினே. 5.57.9

582 அரக்க னாய இலங்கையர்
மன்னனை
நெருக்கி யம்முடி பத்திறுத்
தானவற்
கிரக்க மாகிய வன்றிருக்
கோளிலி
அருத்தி யாயடி யேதொழு
துய்ம்மினே. 5.57.10

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.58** திருப்பழையாறைவடதளி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

583 தலையெ லாம்பறிக்
குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத்
தான்மறைக் கொண்ணுமே
அலையி னார்பொழி லாறை
வடதளி
நிலையி னானடி யேநினைந்
துய்ம்மினே. 5.58.1

584 மூக்கி னால்முரன் றோதியக்
குண்டிகை
தூக்கி னார்குலந் தூரறுத்
தேதனக்
காக்கி னானணி யாறை
வடதளி
நோக்கி னார்க்கில்லை
யாலரு நோய்களே.
5.58.2

குண்ட ரைக்குண மில்லரைக்
585 கூறையில்
மிண்ட ரைத்துரந் தவிம

லன்றனை
அண்ட ரைப்பழை யாறை
வடதளிக்
கண்ட ரைத்தொழு துய்ந்தன 5.58.3
கைகளே.
586 முடைய ரைத்தலை
முண்டிக்கும் மொட்டரை
கடைய ரைக்கடிந் தார்கனல்
வெண்மழுப்
படைய ரைப்பழை யாறை
வடதளி
உடைய ரைக்குளிர்ந்
துள்குமென் உள்ளமே. 5.58.4
587 ஒள்ள ரிக்கணார் முன்னமண்
நின்றுணுங்
கள்ள ரைக்கடிந் தகருப்
பூறலை
அள்ள லம்புன லாறை
வடதளி
வள்ள லைப்புக ழத்துயர்
வாடுமே. 5.58.5
588 நீதி யைக்கெட நின்றம

ணோயுணுஞ்
சாதி யைக்கெடு மாசெய்த
சங்கரன்
ஆதி யைப்பழை யாறை
வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர்
தீருமே. 5.58.6
589 திரட்டி ரைக்க வளந்திணிக்
குஞ்சமண்
பிரட்ட ரைப்பிரித் தபெரு
மான்றனை
அருட்டி றத்தணி யாறை
வடதளித்
தெருட்ட ரைத்தொழத்
தீவினை தீருமே. 5.58.7
590 ஓதி னத்தெழுத் தஞ்சுண
ராச்சமண்
*வேதி னைப்படுத்
தானைவெங் கூற்றுதை
பாத னைப்பழை யாறை
வடதளி
நாத னைத்தொழ நம்வினை

நாசமே. 5.58.8
* வேது என்பது - வெப்பம்.

591 வாயி ருந்தமி ழேபடித்
தாளுறா
ஆயி ரஞ்சம ணும்மழி
வாக்கினான்
பாயி ரும்புன லாறை
வடதளி
மேய வன்னென வல்வினை
வீடுமே. 5.58.9

592 செருத்த னைச்செயுஞ்
சேணரக் கன்னுடல்
எருத்தி றவிர லாலிறை
யூன்றிய
அருத்த னைப்பழை யாறை
வடதளித்
திருத்த னைத்தொழு
வார்வினை தேயுமே. 5.58.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சோமேசுவரர், தேவியார் -
சோமகலாநாயகியம்மை.

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.59 திருமாற்பேறு - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

593 பொருமாற் றின்படை
வேண்டிநற் பூம்புனல்
வருமாற் றின்மலர் கொண்டு
வழிபடுங்
கருமாற் கின்னருள்
செய்தவன் காண்டகு
திருமாற் பேறு தொழவினை
தேயுமே. 5.59.1
594 ஆலத் தார்நிழ லில்லறம்
நால்வர்க்குக்
கோலத் தாலுரை செய்தவன்
குற்றமில்
மாலுக் காரருள் செய்தவன்

மாற்பேறு
ஏலத் தான்றொழு வார்க்கிட 5.59.2
ரில்லையே.

595 துணிவண் ணச்சுட
ராழிகொள் வானெண்ணி
அணிவண் ணத்தலர்
கொண்டடி யர்ச்சித்த
மணிவண் ணற்கருள்
செய்தவன் மாற்பேறு
பணிவண் ணத்தவர்க்
கில்லையாம் பாவமே. 5.59.3

596 தீத வைசெய்து தீவினை
வீழாதே
காதல் செய்து கருத்தினில்
நின்றநன்
மாத வர்பயில் மாற்பேறு
கைதொழப்
போது மின்வினை யாயின
போகுமே. 5.59.4

597 வார்கொள் மென்முலை
மங்கையோர் பங்கினன்
வார்கொள் நன்முர சம்மறை

யவ்வறை
வார்கொள் பைம்பொழில்
மாற்பேறு கைதொழு
வார்கள் மன்னுவர்
பொன்னுல கத்திலே. 5.59.5

598 பண்டை வல்வினை பற்றறுக்
கும்வகை
உண்டு சொல்லுவன்
கேண்மின் ஒளிகிளர்
வண்டு சேர்பொழில் சூழ்திரு
மாற்பேறு
கண்டு கைதொழத் தீருங்
கவலையே. 5.59.6

599 மழுவ லான்றிரு நாமம்
மகிழ்ந்துரைத்
தழுவ லார்களுக் கன்புசெய்
தின்பொடும்
வழுவி லாவருள் செய்தவன்
மாற்பேறு
தொழுவ லார்தமக் கில்லை
துயரமே.

5.59.7

600 முன்ன வனுல குக்கு
முழுமணிப்
பொன்ன வன்றிகழ்
முத்தொடு போகமாம்
மன்ன வன்றிரு மாற்பேறு
கைதொழும்
அன்ன வரெமை யாளுடை
யார்களே. 5.59.8

601 வேட னாய்விச யன்னொடும்
எய்துவெங்
காடு நீடுகந் தாடிய
கண்ணுதல்
மாட நீடுய ருந்திரு மாற்பேறு
பாடு வார்பெறு வார்பர
லோகமே. 5.59.9

602 கருத்த னாய்க்கயி லாய
மலைதனைத்
தருக்கி னாலெடுத் தானைத்
தகரவே
வருத்தி யாரருள் செய்தவன்
மாற்பேறு
அருத்தி யாற்றொழு

வார்க்கில்லை அல்லலே. 5.59.10

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மால்வணங்குமீசர்,
தேவியார் - கருணைநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

_உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப_

---

## **5.60** திருமாற்பேறு - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

603 ஏது மொன்று மறிவில
ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர்
வார்கட்குப்
பேத மின்றி அவரவர்
உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற்
பேறரே. 5.60.1

604 அச்ச மில்லைநெஞ் சேயரன்
நாமங்கள்
நிச்ச லுந்நினை யாய்வினை
போயறக்
கச்ச மாவிட முண்டகண்
டாவென
வைச்ச மாநிதி யாவர் 5.60.2
மாற்பேறரே.
605 சாத்தி ரம்பல பேசுஞ்
சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு
லமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று
பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற்
பேறரே.
5.60.3
606 இருந்து சொல்லுவன்
கேண்மின்கள் ஏழைகாள்
அருந்த வந்தரும்
அஞ்செழுத் தோதினாற்
பொருந்து நோய்பிணி

போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் 5.60.4
பேறரே.

607 சாற்றிச் சொல்லுவன்
கேண்மின் தரணியீர்
ஏற்றின் மேல்வரு வான்கழ
லேத்தினாற்
கூற்றை நீக்கிக் குறைவறுத்
தாள்வதோர்
மாற்றி லாச்செம்பொ
னாவர்மாற் பேறரே. 5.60.5

608 ஈட்டு மாநிதி சால
இழக்கினும்
வீட்டுங் காலன் விரைய
அழைக்கினுங்
காட்டில் மாநட மாடுவாய்
காவெனில்
வாட்டந் தீர்க்கவும்
வல்லர்மாற் பேறரே.
5.60.6

609 ஐய னேயர னேயென்
றரற்றினால்

உய்ய லாமுல கத்தவர்
பேணுவர்
செய்ய பாத மிரண்டும்
நினையவே
வைய மாளவும் 5.60.7
வைப்பர்மாற் பேறரே.

இப்பதிகத்தில் 8,9-ம்
செய்யுட்கள் சிதைந்து 5.60.8-9
போயின.

உந்திச் சென்று மலையை
யெடுத்தவன்
சந்து தோளொடு தாளிற
வூன்றினான்
மந்தி பாய்பொழில் சூழுமாற்
பேறென
அந்த மில்லதோர் இன்பம்
அணுகுமே. 5.60.10

திருச்சிற்றம்பலம்

[உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப]

## 5.61 திருஅரிசிற்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

611 முத்தூ ரும்புனல் மொய்யரி
சிற்கரைப்
புத்தூ ரன்னடி போற்றியென்
பாரெலாம்
பொய்த்தூ ரும்புல
னைந்தொடு புல்கிய
மைத்தூ ரும்வினை
மாற்றவும் வல்லரே. 5.61.1

612 பிறைக்க ணிச்சடை
யெம்பெரு மானென்று
கறைக்க ணித்தவர் கண்ட
வணக்கத்தாய்
உறக்க ணித்துரு காமனத்
தார்களைப்
புறக்க ணித்திடும் புத்தூர்ப்
புனிதரே. 5.61.2

613 அரிசி லின்கரை மேலணி
யார்தரு
புரிசை நந்திருப் புத்தூர்ப்
புனிதனைப்
பரிசொ டும்பர விப்பணி
வார்க்கெலாந்
துரிசில் நன்னெறி
தோன்றிடுங் காண்மினே. 5.61.3

614 வேத னைமிகு வீணையின்
மேவிய
கீத னைக்கிள ருந்நறுங்
கொன்றையம்
போத னைப்புனல் சூழ்ந்தபுத்
தூரனை
நாத னைந்நினைந்
தென்மனம் நையுமே. 5.61.4

615 அருப்புப் போன்முலை
யாரல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை
விட்டுநல் லிட்டமாய்
திருப்புத் தூரனைச் சிந்தை

செயச்செயக்
கருப்புச் சாற்றிலும் 5.61.5
அண்ணிக்குங் காண்மினே.
616 பாம்பொ டுமதி யும்படர்
புன்சடைப்
பூம்பு னலும்பொ திந்தபுத்
தூருளான்
நாம்ப ணிந்தடி போற்றிட
நாடொறுஞ்
சாம்பல் என்பு தனக்கணி
யாகுமே.
5.61.6
617 கனலங் கைதனி லேந்திவெங்
காட்டிடை
அனலங் கெய்திநின் றாடுவர்
பாடுவர்
பினலஞ் செஞ்சடை
மேற்பிறை யுந்தரு
புனலுஞ் சூடுவர் போலும்புத்
தூரரே. 5.61.7
618 காற்றி னுங்கடி தாகி
நடப்பதோர்

ஏற்றி னும்மிசைந் தேறுவர்
என்பொடு
நீற்றி னையணி வர்நினை
வாய்த்தமைப்
போற்றி யென்பவர்க்
கன்பர்புத் தூரரே. 5.61.8

619 முன்னு முப்புரஞ் செற்றன
ராயினும்
அன்ன மொப்பர்
அலந்தடைந் தார்க்கெலாம்
மின்னு மொப்பர் விரிசடை
மேனிசெம்
பொன்னு மொப்பர்புத்
தூரெம் புனிதரே. 5.61.9

620 செருத்த னாற்றன தேர்செல
வுய்த்திடுங்
கருத்த னாய்க்கயி லையெடுத்
தானுடல்
பருத்த தோள்கெடப் பாதத்
தொருவிரல்
பொருத்தி னார்பொழி
லார்ந்தபுத் தூரரே. 5.61.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - படிக்காசுவைத்தநாதர்,
தேவியார் - அழகாம்பிகை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.62 திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

621 ஒருத்த னைமூ வுலகொடு
தேவர்க்கும்
அருத்த னையடி யேன்மனத்
துள்ளமர்
கருத்த னைக்கடு வாய்ப்புன
லாடிய
திருத்த னைப்புத்தூர்
சென்றுகண் டுய்ந்தேனே. 5.62.1
622 யாவ ருமறி தற்கரி

யான்றனை
மூவ ரின்முத லாகிய
மூர்த்தியை
நாவின் நல்லுரை யாகிய
நாதனைத்
தேவனைப் புத்தூர் 5.62.2
சென்றுகண் டுய்ந்தேனே.

623 அன்ப னையடி யாரிடர்
நீக்கியைச்
செம்பொ னைத்திக ழுந்திருக்
கச்சியே
கம்ப னைக்கடு வாய்க்கரைத்
தென்புத்தூர்
நம்ப னைக்கண்டு நானுய்யப்
பெற்றேனே. 5.62.3

624 மாத னத்தைமா தேவனை
மாறிலாக்
கோத னத்திலைந் தாடியை
வெண்குழைக்
காத னைக்கடு வாய்க்கரைத்
தென்புத்தூர்
நாத னைக்கண்டு நானுய்யப்

பெற்றேனே. 5.62.4

625 குண்டு பட்டகுற் றந்தவிர்த்
தென்னையாட்
கொண்டு நற்றிறங் காட்டிய
கூத்தனைக்
கண்ட னைக்கடு
வாய்க்கரைத் தென்புத்தூர்
அண்ட னைக்கண் டருவினை
யற்றேனே. 5.62.5

626 பந்த பாச மறுத்தெனை
யாட்கொண்ட
மைந்த னைம்மண வாளனை
மாமலர்க்
கந்த நீர்க்கடு வாய்க்கரைத்
தென்புத்தூர்
எந்தை யீசனைக் கண்டினி
தாயிற்றே. 5.62.6

627 உம்ப ரானை உருத்திர
மூர்த்தியை
அம்ப ரானை அமலனை
ஆதியைக்
கம்பு நீர்க்கடு வாய்க்கரைத்

தென்புத்தூர்
எம்பி ரானைக்கண் டின்பம
தாயிற்றே. 5.62.7

628 மாசார் பாச மயக்கறு
வித்தெனுள்
நேச மாகிய நித்த
மணாளனைப்
பூச நீர்க்கடு வாய்க்கரைத்
தென்புத்தூர்
ஈச னேயென இன்பம
தாயிற்றே. 5.62.8

629 இடுவா ரிட்ட கவளங்
கவர்ந்திரு
கடுவா யிட்டவர் கட்டுரை
கொள்ளாதே
கடுவாய்த் தென்கரைப் புத்தூ
ரடிகட்காட்
படவே பெற்றுநான்
பாக்கியஞ் செய்தேனே. 5.62.9

630 அரக்க னாற்றல் அழித்தவன்
பாடல்கேட்

டிரக்க மாகி அருள்புரி
யீசனைத்
திரைக்கொள் நீர்க்கடு
வாய்க்கரைத் தென்புத்தூர்
இருக்கு நாதனைக் 5.62.10
காணப்பெற் றுய்ந்தேனே.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சொர்ணபுரீசுவரர்,
தேவியார் - சொர்ணபுரிநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.63** திருக்குரங்காடுதுறை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

631 இரங்கா வன்மனத் தார்கள்

இயங்குமுப்
புரங்கா வல்லழி யப்பொடி
யாக்கினான்
தரங்கா டுந்தட
நீர்ப்பொன்னித் தென்கரைக்
குரங்கா டுதுறைக் கோலக்
கபாலியே. 5.63.1

632 முத்தி னைமணி யைப்பவ
ளத்தொளிர்
தொத்தி னைச்சுடர்
சோதியைச் சோலைசூழ்
கொத்த லர்குரங் காடு
துறையுறை
அத்த னென்னஅண் ணித்திட்
டிருந்ததே. 5.63.2

633 குளிர்பு னற்குரங் காடு
துறையனைத்
தளிர்நி றத்தையல்
பங்கனைத் தண்மதி
ஒளிய னைந்நினைந்
தேனுக்கென் உள்ளமுந்
தெளிவி னைத்தெளி

யத்தெளிந் திட்டதே. 5.63.3

634 மணவன் காண்மலை
யாள்நெடு மங்கலக்
கணவன் காண்கலை
ஞானிகள் காதலெண்
குணவன் காண்குரங் காடு
துறைதனில்
அணவன் காணன்பு செய்யு
மடியர்க்கே. 5.63.4

635 ஞாலத் தார்தொழு தேத்திய
நன்மையன்
காலத் தானுயிர் போக்கிய
காலினன்
நீலத் தார்மிடற்
றான்வெள்ளை நீறணி
கோலத் தான்குரங் காடு
துறையனே.
5.63.5

636 ஆட்டி னான்முன் அமணரோ
டென்றனைப்
பாட்டி னான்றன பொன்னடிக்
கின்னிசை

வீட்டி னான்வினை மெய்யடி
யாரொடுங்
கூட்டி னான்குரங் காடு 5.63.6
துறையனே.

637 மாத்தன் றான்மறை
யார்முறை யான்மறை
ஓத்தன் றாருகன் றன்னுயி
ருண்டபெண்
போத்தன் றானவள் பொங்கு
சினந்தணி
கூத்தன் றான்குரங் காடு
துறையனே. 5.63.7

638 நாடி நந்தம ராயின
தொண்டர்காள்
ஆடு மின்னழு மின்தொழு
மின்னடி
பாடு மின்பர மன்பயி
லும்மிடங்
கூடு மின்குரங் காடு
துறையையே. 5.63.8

639 தென்றல் நன்னெடுந்
தேருடை யானுடல்

பொன்ற வெங்கனல் பொங்க
விழித்தவன்
அன்ற வந்தக னையயிற்
சூலத்தாற்
கொன்ற வன்குரங் காடு
துறையனே. 5.63.9

640 நற்ற வஞ்செய்த நால்வர்க்கு
நல்லறம்
உற்ற நன்மொழி யாலருள்
செய்தநற்
கொற்ற வன்குரங் காடு
துறைதொழப்
பற்றுந் தீவினை யாயின
பாறுமே. 5.63.10

641 கடுத்த தேரரக் கன்கயி
லைம்மலை
எடுத்த தோள்தலை யிற்றல
றவ்விரல்
அடுத்த லுமவன் இன்னிசை
கேட்டருள்
கொடுத்த வன்குரங் காடு
துறையனே.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - ஆபத்சகாயர், தேவியார் - பவளக்கொடியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.64 திருக்கோழம்பம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

642 வேழம் பத்தைவர்
வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழம் பற்றிவீழ் வார்பல
வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன்
குரைகழற்
தாழும் பத்தர்கள் சாலச்

சதுரரே. 5.64.1

643 கயிலை நன்மலை யாளுங்
கபாலியை
மயிலி யன்மலை மாதின்
மணாளனைக்
குயில்ப யில்பொழிற்
கோழம்ப மேயவென்
உயிரி னைநினைந் துள்ளம் 5.64.2
உருகுமே.

644 வாழும் பான்மைய ராகிய
வான்செல்வந்
தாழும் பான்மைய ராகித்தம்
வாயினால்
தாழம் பூமணம் நாறிய
தாழ்பொழிற்
கோழம் பாவெனக் கூடிய
செல்வமே. 5.64.3

645 பாட லாக்கிடும் பண்ணொடு
பெண்ணிவள்
கூட லாக்கிடுங் குன்றின்
மணற்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத்

துண்மகிழ்ந்
தாடுங் கூத்தனுக் கன்புபட்
டாளன்றே.
5.64.4

646 தளிர்கொள் மேனியள்
தான்மிக அஞ்சவோர்
பிளிறு வாரணத் தீருரி
போர்த்தவன்
குளிர்கொள் நீள்வயல்
கோழம்பம் மேவினான்
நளிர்கொள் நீர்சடை மேலு
நயந்ததே. 5.64.5

647 நாத ராவர் நமக்கும்
பிறர்க்குந்தாம்
வேத நாவர் விடைக்கொடி
யார்வெற்பிற்
கோதை மாதொடுங்
கோழம்பங் கோயில்கொண்
டாதி பாத மடையவல்
லார்களே. 5.64.6

648 முன்னை நான்செய்த பாவ
முதலறப்

பின்னை நான்பெரி தும்மருள்
பெற்றதும்
அன்ன மார்வயற் கோழம்பத்
துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் 5.64.7
பிதற்றியே.

649 ஏழை மாரிடம் நின்றிரு
கைக்கொடுண்
கோழை மாரொடுங் கூடிய
குற்றமாங்
கூழை பாய்வயற் கோழம்பத்
தானடி
ஏழை யேன்முன் மறந்தங்
கிருந்ததே. 5.64.8

650 அரவ ணைப்பயில் மாலயன்
வந்தடி
பரவ னைப்பர மாம்பரஞ்
சோதியைக்
குரவ னைக்குர வார்பொழிற்
கோழம்பத்
துரவ னையொரு வர்க்குணர்
வொண்ணுமே. 5.64.9

651 சமர சூரபன் மாவைத்
தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்ப
மேவிய
அமரர் கோவினுக்
கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை
யார்களே. 5.64.10

துட்ட னாகி மலையெடுத்
652 தஃதின்கீழ்ப்
பட்டு வீழ்ந்து படர்ந்துய்யப்
போயினான்
கொட்டம் நாறிய கோழம்பத்
தீசனென்
றிட்ட கீத மிசைத்த
அரக்கனே. 5.64.11

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கோகுலேசுவரர், தேவியார்
- சவுந்தரியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.65 திருப்பூவனூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

653 பூவ னூர்ப்புனி தன்றிரு
நாமந்தான்
நாவின் நூறுநூ றாயிரம்
நண்ணினார்
பாவ மாயின பாறிப்
பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க
ளாவரே. 5.65.1
654 என்ன னென்மனை
எந்தையெ னாருயிர்
தன்னன் றன்னடி
யேன்றனமாகிய
பொன்னன் பூவனூர் மேவிய
புண்ணியன்
இன்ன னென்றறி

வொண்ணான் இயற்கையே. 5.65.2

655 குற்றங் கூடிக் குணம்பல
கூடாதீர்
மற்றுந் தீவினை செய்தன
மாய்க்கலாம்
புற்ற ராவினன் பூவனூர்
ஈசன்பேர்
கற்று வாழ்த்துங் கழிவதன்
முன்னமே. 5.65.3

656 ஆவின் மேவிய ஐந்தமர்ந்
தாடுவான்
தூவெண் ணீறு துதைந்தசெம்
மேனியான்
மேவ நூல்விரி
வெண்ணியின் தென்கரைப்
பூவ னூர்புகு வார்வினை
போகுமே. 5.65.4

657 புல்ல மூர்தியூர் பூவனூர்
பூம்புனல்
நல்ல மூர்திநல் லூர்நனி
பள்ளியூர்
தில்லை யூர்திரு வாரூர்

சீர்காழிநல்
வல்ல மூரென வல்வினை
மாயுமே. 5.65.5

658 அனுச யப்பட்ட துவிது
வென்னாதே
கனிம னத்தொடு கண்களும்
நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப்
போற்றுவார்
மனித ரிற்றலை யான
மனிதரே. 5.65.6

659 ஆதி நாதன் அமரர்க
ளர்ச்சிதன்
வேத நாவன்வெற் பின்மடப்
பாவையோர்
பாதி யானான் பரந்த
பெரும்படைப்
பூத நாதன்தென் பூவனூர்
நாதனே. 5.65.7

660 பூவ னூர்தண் புறம்பயம்
பூம்பொழில்

நாவ லூர்நள் ளாறொடு
நன்னிலங்
கோவ லூர்குட வாயில்
கொடுமுடி
மூவ லூருமுக் கண்ணனூர்
காண்மினே. 5.65.8

661 ஏவ மேது மிலாவம ணேதலர்
பாவ காரிகள் சொல்வலைப்
பட்டுநான்
தேவ தேவன் திருநெறி
யாகிய
பூவ னூர்புகு தப்பெற்ற
நாளின்றே. 5.65.9

662 நார ணன்னொடு நான்முகன்
இந்திரன்
வார ணன்குமர ரன்வணங்
குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர்
மேவிய
கார ணன்னெனை
யாளுடைக் காளையே. 5.65.10

மைக்க டுத்த நிறத்தரக்

663 கன்வரை
புக்கெ டுத்தலும் பூவனூ
ரன்னடி
மிக்க டுத்த விரல்சிறி
தூன்றலும்
பக்க டுத்தபின் பாடியுய்ந்
தானன்றே. 5.65.11

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - புஷ்பவனநாதர் தேவியார் - கற்பகவல்லியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.66 திருவலஞ்சுழி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

664 ஓத மார்கட லின்விட
முண்டவன்

பூத நாயகன் பொற்கயி
லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி
யீசனைப்
பாத மேத்தப் பறையுநம்
பாவமே. 5.66.1

665 கயிலை நாதன் கறுத்தவர்
முப்புரம்
எயில்கள் தீயெழ வெல்வல
வித்தகன்
மயில்க ளாலும் வலஞ்சுழி
யீசனைப்
பயில்கி லார்சிலர் பாவித்
தொழும்பரே. 5.66.2

666 இளைய காலமெம் மானை
யடைகிலாத்
துளையி லாச்செவித்
தொண்டர்காள் நும்முடல்
வளையுங் காலம் வலஞ்சுழி
யீசனைக்
களைக ணாகக் கருதிநீர்
உய்ம்மினே. 5.66.3

667 நறைகொள் பூம்புனல்
கொண்டெழு மாணிக்காய்க்
குறைவி லாக்கொடுங்
கூற்றுதைத் திட்டவன்
மறைகொள் நாவன்
வலஞ்சுழி மேவிய
இறைவ னையினி
என்றுகொல் காண்பதே. 5.66.4

668 விண்ட வர்புர மூன்று
மெரிகொளத்
திண்டி றற்சிலை யாலெரி
செய்தவன்
வண்டு பண்முர லுந்தண்
வலஞ்சுழி
அண்ட னுக்கடி மைத்திறத்
தாவனே. 5.66.5

669 படங்கொள் பாம்பொடு
பான்மதி யஞ்சடை
அடங்க வாழவல் லானும்பர்
தம்பிரான்
மடந்தை பாகன் வலஞ்சுழி
யானடி

அடைந்த வர்க்கடி மைத்திறத்
தாவனே. 5.66.6

670 நாக்கொண் டுபர வும்மடி
யார்வினை
போக்க வல்ல புரிசடைப்
புண்ணியன்
மாக்கொள் சோலை
வலஞ்சுழி ஈசன்றன்
ஏக்கொ ளப்புர மூன்றெரி
யானவே. 5.66.7

671 தேடு வார்பிர மன்திரு
மாலவர்
ஆடு பாத மவரும்
அறிகிலார்
மாட வீதி வலஞ்சுழி
யீசனைத்
தேடு வானுறு கின்றதென்
சிந்தையே.
5.66.8

672 கண்ப னிக்குங் கைகூப்புங்
கண்மூன்றுடை
நண்ப னுக்கெனை

நான்கொடுப் பேனெனும்
வண்பொ னித்தென்
வலஞ்சுழி மேவிய
பண்ப னிப்பொனைச் செய்த 5.66.9
பரிசிதே.

673 இலங்கை வேந்தன் இருபது
தோளிற
நலங்கொள் பாதத் தொருவிர
லூன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த
வலஞ்சுழி
வலங்கொள் வாரடி
யென்றலை மேலவே.
5.66.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - வலஞ்சுழிநாதர், தேவியார்
- பெரியநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

## 5.67 திருவாஞ்சியம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

674 படையும் பூதமும்
பாம்புபுல் வாயதள்
உடையுந் தாங்கிய உத்தம
னார்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில்
வாஞ்சியம்
அடைய வல்லவர்க்
கல்லலொன் றில்லையே. 5.67.1
675 பறப்பை யும்பசு வும்படுத்
துப்பல
திறத்த வும்முடை யோர்திக
ழும்பதி
கறைப்பி றைச்சடைக்
கண்ணுதல் சேர்தரு
சிறப்பு டைத்திரு வாஞ்சியஞ்
சேர்மினே. 5.67.2
676 புற்றி லாடர வோடு புனல்மதி
தெற்று செஞ்சடைத் தேவர்

பிரான்பதி
சுற்று மாடங்கள் சூழ்திரு
வாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க் குப்பாவ
மில்லையே. 5.67.3

677 அங்க மாறும் அருமறை
நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயி
லுந்நகர்
செங்கண் மாலிட மார்திரு
வாஞ்சியந்
தங்கு வார்நம் மமரர்க்
கமரரே. 5.67.4

678 நீறு பூசி நிமிர்சடை
மேற்பிறை
ஆறு சூடும் அடிகள் உறைபதி
மாறு தானொருங் கும்வயல்
வாஞ்சியந்
தேறி வாழ்பவர்க் குச்செல்வ
மாகுமே. 5.67.5

679 அற்றுப் பற்றின்றி யாரையு
மில்லவர்க்

குற்ற நற்றுணை யாவான்
உறைபதி
தெற்று மாடங்கள் சூழ்திரு
வாஞ்சியங்
கற்றுச் சேர்பவர்க் குக்கருத்
தாவதே. 5.67.6

680 அருக்கன் அங்கி நமனொடு
தேவர்கள்
திருத்துஞ் சேவடி யான்றிக
ழுந்நகர்
ஒருத்தி பாக முகந்தவன்
வாஞ்சியம்
அருத்தி யாலடை
வார்க்கில்லை யல்லலே. 5.67.7

இப்பதிகத்தில் 8,9,10-ம்
செய்யுட்கள் சிதைந்து
போயின. 5.67.8-10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சுகவாஞ்சிநாதர், தேவியார்
- வாழவந்தஅம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.68 திருநள்ளாறு - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

681 உள்ளா றாததோர் புண்டரி
கத்திரள்
தெள்ளா றாச்சிவ சோதித்
திரளினைக்
கள்ளா றாதபொற் கொன்றை
கமழ்சடை
நள்ளா றாவென நம்வினை
நாசமே. 5.68.1

682 ஆர ணப்பொரு ளாமரு
ளாளனார்
வார ணத்துரி போர்த்த
மணாளனார்
நார ணன்நண்ணி யேத்துநள்
ளாறனார்

கார ணக்கலை ஞானக் 5.68.2
கடவுளே.

683 மேகம் பூண்டதோர்
மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல்
சோரத்தொட் டானவன்
பாகம் பூண்டமால் பங்கயத்
தானொடு
நாகம் பூண்டுகூத் தாடுநள்
ளாறனே.
5.68.3

684 மலியுஞ் செஞ்சடை வாளர
வம்மொடு
பொலியும் பூம்புனல் வைத்த
புனிதனார்
நலியுங் கூற்றை நலிந்தநள்
ளாறர்தம்
வலியுங் கண்டிறு மாந்து
மகிழ்வனே. 5.68.4

685 உறவ னாய்நிறைந் துள்ளங்
குளிர்ப்பவன்
இறைவ னாகிநின்

றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு
நள்ளாறன்
மறவ னாய்ப்பன்றிப் 5.68.5
பின்சென்ற மாயமே.
686 செக்க ரங்கழி செஞ்சுடர்ச்
சோதியார்
நக்க ரங்கர வார்த்தநள்
ளாறனார்
வக்க ரன்னுயிர் வவ்விய
மாயற்குச்
சக்க ரமருள் செய்த சதுரரே.
5.68.6

687 வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற
கண்டத்தர்
விஞ்சை யிற்செல்வப்
பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு
வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க் கருளுநள்
ளாறரே. 5.68.7
688 அல்ல னென்று மலர்க்கரு

ளாயின
சொல்ல னென்றுசொல்
லாமறைச் சோதியான்
வல்ல னென்றும்வல் லார்வள
மிக்கவர்
நல்ல னென்றுநல் லார்க்குநள் 5.68.8
ளாறனே.

689 பாம்ப ணைப்பள்ளி கொண்ட
பரமனும்
பூம்ப ணைப்பொலி கின்ற
புராணனுந்
தாம்ப ணிந்தளப்
பொண்ணாத் தனித்தழல்
நாம்ப ணிந்தடி போற்றுநள்
ளாறனே.

5.68.9

690 இலங்கை மன்னன் இருபது
தோளிற
மலங்க மால்வரை
மேல்விரல் வைத்தவர்
நலங்கொள் நீற்றர்நள்
ளாறரை நாடொறும்

வலங்கொள் வார்வினை 5.68.10
யாயின மாயுமே.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - திருநள்ளாற்றீசர்,
தேவியார் -
போகமார்த்தபூண்முலையம்மை.
திருச்சிற்றம்பலம்
*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## 5.69 திருக்கருவிலி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

691 மட்டிட் டகுழ லார்சுழ
லில்வலைப்
பட்டிட் டுமயங் கிப்பரி
யாதுநீர்
கட்டிட் டவினை போகக்
கருவிலிக்
கொட்டிட் டையுறை

வான்கழல் கூடுமே. 5.69.1

692 ஞால மல்கு மனிதர்காள்
நாடொறும்
ஏல மாமல ரோடிலை
கொண்டுநீர்
கால னார்வரு தன்முன்
கருவிலிக்
கோல வார்பொழிற்
கொட்டிட்டை சேர்மினே. 5.69.2

693 பங்க மாயின பேசப்
பறைந்துநீர்
மங்கு மாநினை யாதே
மலர்கொடு
கங்கை சேர்சடை யான்றன்
கருவிலிக்
கொங்கு வார்பொழிற்
கொட்டிட்டை சேர்மினே. 5.69.3

694 வாடி நீர்வருந் தாதே
மனிதர்காள்
வேட னாய்விச யற்கருள்
செய்தவெண்
காட னாருறை கின்ற

கருவிலிக்
கோடு நீள்பொழிற்
கொட்டிட்டை சேர்மினே. 5.69.4

695 உய்யு மாறிது கேண்மின்
உலகத்தீர்
பைகொள் பாம்பரை
யான்படை யார்மழுக்
கையி னானுறை கின்ற
கருவிலிக்
கொய்கொள் பூம்பொழிற்
கொட்டிட்டை சேர்மினே. 5.69.5

696 ஆற்ற வும்மவ லத்தழுந்
தாதுநீர்
தோற்றுந் தீயொடு நீர்நிலந்
தூவெளி
காற்று மாகிநின் றான்றன்
கருவிலிக்
கூற்றங் காய்ந்தவன்
கொட்டிட்டை சேர்மினே.
5.69.6

697 நில்லா வாழ்வு நிலைபெறு
மென்றெண்ணிப்

பொல்லா வாறு செயப்புரி
யாதுநீர்
கல்லா ரும்மதில் சூழ்தண்
கருவிலிக்
கொல்லே றூர்பவன்
கொட்டிட்டை சேர்மினே. 5.69.7

698 பிணித்த நோய்ப்பிற விப்பிறி
வெய்துமா
றுணர்த்த லாமிது கேண்மின்
உருத்திர
கணத்தி னார்தொழு தேத்துங்
கருவிலிக்
குணத்தி னானுறை
கொட்டிட்டை சேர்மினே. 5.69.8

699 நம்பு வீரிது கேண்மின்கள்
நாடொறும்
எம்பி ரானென் றிமையவ
ரேத்துமே
கம்ப னாருறை கின்ற
கருவிலிக்
கொம்ப னார்பயில்
கொட்டிட்டை சேர்மினே. 5.69.9

700 பாரு ளீரிது கேண்மின்
பருவரை
பேரு மாறெடுத் தானை
யடர்த்தவன்
கார்கொள் நீர்வயல் சூழ்தண்
கருவிலிக்
கூர்கொள் வேலினன்
கொட்டிட்டை சேர்மினே. 5.69.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சற்குணநாதர், தேவியார் -
சர்வாங்கநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.70 திருக்கொண்டீச்சரம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

701 கண்ட பேச்சினிற் காளையர்
தங்கள்பால்
மண்டி யேச்சுணு மாதரைச்
சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள்
செய்தவக்
கொண்டி யீச்சுர வன்கழல்
கூறுமே. 5.70.1
702 சுற்ற முந்துணை நன்மட
வாளொடு
பெற்ற மக்களும் பேண
லொழிந்தனர்
குற்ற மில்புகழ்க் கொண்டீச்
சுரவனார்
பற்ற லாலொரு பற்றுமற்
றில்லையே.
5.70.2
703 மாடு தானது வில்லெனின்
மானிடர்
பாடு தான்செல்வா
ரில்லைபன் மாலையாற்
கூட நீர்சென்று கொண்டீச்

சுரவனைப்
பாடு மின்பர லோகத் 5.70.3
திருத்துமே.

704 தந்தை தாயொடு தார
மெனுந்தளைப்
பந்த மாங்கறுத் துப்பயில்
வெய்திய
கொந்த விழ்பொழிற்
கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்ம்மின் அவனடி
சேரவே. 5.70.4

705 கேளு மின்னிள மையது
கேடுவந்
தீளை யோடிரு மல்லது
வெய்தன்முன்
கோள ராவணி கொண்டீச்
சுரவனை
நாளு மேத்தித்
தொழுமின்நன் காகுமே. 5.70.5

706 வெம்பு நோயும் இடரும்
வெறுமையும்
துன்ப முந்துய ரும்மெனுஞ்

சூழ்வினை
கொம்ப னார்பயில்
கொண்டீச் சுரவனை
எம்பி ரானென வல்லவர்க்
கில்லையே. 5.70.6

707 அல்ல லோடரு நோயில்
அழுந்திநீர்
செல்லு மாநினை யாதே
கனைகுரற்
கொல்லை யேறுடைக்
கொண்டீச் சுரவனை
வல்ல வாறு தொழவினை
மாயுமே. 5.70.7

708 நாறு சாந்தணி நன்முலை
மென்மொழி
மாறி லாமலை மங்கையோர்
பாகமாக்
கூற னாருறை கொண்டீச்
சுரநினைந்
தூறு வார்தமக் கூனமொன்
றில்லையே. 5.70.8

709 அயிலார் அம்பெரி

மேருவில் லாகவே
எயிலா ரும்பொடி யாய்விழ
எய்தவன்
குயிலா ரும்பொழிற்
கொண்டீச் சுரவனைப்
பயில்வா ரும்பெரு
மைபெறும் பாலரே. 5.70.9

710 நிலையி னார்வரை
நின்றெடுத் தான்றனை
மலையி னாலடர்த் துவிறல்
வாட்டினான்
குலையி னார்பொழிற்
கொண்டீச் சுரவனைத்
தலையி னால்வணங் கத்தவ
மாகுமே. 5.70.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பசுபதீச்சுவரர், தேவியார் -
சாந்தநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

## 5.71 திருவிசயமங்கை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

711 குசையும் அங்கையிற்
கோசமுங் கொண்டவவ்
வசையின் மங்கல வாசகர்
வாழ்த்தவே
இசைய மங்கையுந்
தானுமொன் றாயினான்
விசைய மங்கையுள் 5.71.1
வேதியன் காண்மினே.
712 ஆதி நாதன் அடல்விடை
மேலமர்
பூத நாதன் புலியத
ளாடையன்
வேத நாதன் விசயமங்
கையுளான்
பாத மோதவல் லார்க்கில்லை

பாவமே. 5.71.2

713 கொள்ளி டக்கரைக் கோவந்த
புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச
யமங்கை
உள்ளி டத்துறை கின்ற
உருத்திரன்
கிள்ளி டத்தலை யற்ற
தயனுக்கே. 5.71.3

714 திசையு மெங்குங் குலுங்கத்
திரிபுரம்
அசைய வங்கெய்திட் டாரழ
லூட்டினான்
விசைய மங்கை விருத்தன்
புறத்தடி
விசையின் மங்கி
விழுந்தனன் காலனே. 5.71.4

715 பொள்ள லாக்கை
அகத்திலைம் பூதங்கள்
கள்ள மாக்கிக் கலக்கிய
காரிருள்
விள்ள லாக்கி விசயமங்

கைப்பிரான்
உள்ள நோக்கியெ னுள்ளுள் 5.71.5
உறையுமே.
716 கொல்லை யேற்றுக்
கொடியொடு பொன்மலை
வில்லை யேற்றுடை
யான்விச யமங்கைச்
செல்வ போற்றியென்
பாருக்குத் தென்றிசை
எல்லை யேற்றலும்
இன்சொலு மாகுமே. 5.71.6
717 கண்பல் உக்கக் கபாலம்அங்
கைக்கொண்டு
உண்ப லிக்குழல் உத்தம
னுள்ளொளி
வெண்பி றைக்கண்ணி
யான்விச யமங்கை
நண்ப னைத்தொழப் பெற்றது
நன்மையே. 5.71.7
718 பாண்டு வின்மகன் பார்த்தன்
பணிசெய்து
வேண்டு நல்வரங் கொள்விச

யமங்கை
ஆண்ட வன்னடி யேநினைந்
தாசையாற்
காண்ட லேகருத் தாகி
யிருப்பனே. 5.71.8

719 வந்து கேண்மின் மயல்தீர்
மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங்
கைப்பிரான்
சிந்தை யால்நினை
வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உயக்கொளுங்
காண்மினே. 5.71.9

720 இலங்கை வேந்தன் இருபது
தோளிற
விலங்கள் சேர்விர லான்விச
யமங்கை
வலஞ்செய் வார்களும்
வாழ்த்திசைப் பார்களும்
நலஞ்செய் வாரவர் நன்னெறி
நாடியே. 5.72.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - விசையநாதேசுவரர்,
தேவியார் - மங்கைநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

[உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப]()

---

## 5.72 திருநீலக்குடி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

721 வைத்த மாடும் மனைவியும்
மக்கள்நீர்
செத்த போது செறியார்
பிரிவதே
நித்த நீலக் குடியர
னைந்நினை
சித்த மாகிற் சிவகதி
சேர்திரே. 5.72.1

722 செய்ய மேனியன் றேனொடு

பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மைய லாய்மற வாமனத்
தார்க்கெலாங்
கையி லாமல கக்கனி 5.72.2
யொக்குமே.
723 ஆற்ற நீள்சடை ஆயிழை
யாளொரு
கூற்றன் மேனியிற் கோலம
தாகிய
நீற்றன் நீலக் குடியுடை
யானடி
போற்றி னாரிடர் போக்கும்
புனிதனே.
5.72.3
724 நாலு வேதியர்க் கின்னருள்
நன்னிழல்
ஆலன் ஆலநஞ் சுண்டகண்
டத்தமர்
நீலன் நீலக் குடியுறை
நின்மலன்
கால னாருயிர் போக்கிய

காலனே. 5.72.4

725 நேச நீலக் குடியர னேயெனா
நீச ராய்நெடு மால்செய்த
மாயத்தால்
ஈச னோர்சர மெய்ய
எரிந்துபோய்
நாச மானார் திரிபுர நாதரே.
5.72.5

726 கொன்றை சூடியைக் குன்ற
மகளொடு
நின்ற நீலக் குடியர
னேயெனீர்
என்றும் வாழ்வுகந் தேயிறு
மாக்குநீர்
பொன்றும் போது நுமக்கறி
வொண்ணுமே. 5.72.6

727 கல்லி னோடெனைப் பூட்டி
அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென்
வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்
குடியரன்

நல்ல நாமம் நவிற்றியுய்ந் 5.72.7
தேனன்றே.
728 அழகி யோமிளை யோமெனு
மாசையால்
ஒழுகி ஆவி உடல்விடு
முன்னமே
நிழல தார்பொழில் நீலக்
குடியரன்
கழல்கொள் சேவடி
கைதொழு துய்ம்மினே.
5.72.8

729 கற்றைச் செஞ்சடைக்
காய்கதிர் வெண்டிங்கள்
பற்றிப் பாம்புடன் வைத்த
பராபரன்
நெற்றிக் கண்ணுடை நீலக்
குடியரன்
சுற்றித் தேவர் தொழுங்கழற்
சோதியே. 5.72.9
730 தருக்கி வெற்பது தாங்கிய
வீங்குதோள்
அரக்க னாருட லாங்கோர்

விரலினால்
நெரித்து நீலக் குடியரன்
பின்னையும்
இரக்க மாயருள் செய்தனன்
என்பரே. 5.72.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - நீலகண்டேசுவரர்,
தேவியார் - நீலநிறவுமையம்மை.
திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## **5.73** திருமங்கலக்குடி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

731 தங்க லப்பிய தக்கன்
பெருவேள்வி
அங்க லக்கழித் தாரருள்
செய்தவன்

கொங்க லர்க்குழற்
கொம்பனை யாளொடு
மங்க லக்குடி மேய
மணாளனே. 5.73.1

732 காவி ரியின்வ டகரைக்
காண்டகு
மாவி ரியும்பொ ழில்மங்
கலக்குடித்
தேவ ரியும்பி ரமனுந்
தேடொணாத்
தூவெ ரிச்சுடர்ச் சோதியுட்
சோதியே. 5.73.2

733 மங்க லக்குடி ஈசனை
மாகாளி
வெங்க திர்ச்செல்வன்
விண்ணொடு மண்ணுநேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்க கத்திய னும்மர்ச்சித்
தாரன்றே. 5.73.3

734 மஞ்சன் வார்கடல் சூழ்மங்க
லக்குடி
நஞ்ச மாரமு தாக

நயந்துகொண்
டஞ்சு மாட லமர்ந்தடி
யேனுடை
நெஞ்ச மாலய மாக்கொண்டு
நின்றதே. 5.73.4
735 செல்வ மல்கு திருமங்
கலக்குடிச்
செல்வ மல்கு சிவநிய
மத்தராய்ச்
செல்வ மல்கு செழுமறை
யோர்தொழச்
செல்வன் றேவியொ
டுந்திகழ் கோயிலே. 5.73.5
736 மன்னு சீர்மங் கலக்குடி
மன்னிய
பின்னு வார்சடைப்
பிஞ்ஞகன் றன்பெயர்
உன்னு வாரு முரைக்கவல்
லார்களுந்
துன்னு வார்நன்
னெறிதொடர் வெய்தவே.
5.73.6

737 மாத ரார்மரு வும்மங்க
லக்குடி
ஆதி நாயகன் அண்டர்கள்
நாயகன்
வேத நாயகன் வேதியர்
நாயகன்
பூத நாயகன் புண்ணிய
மூர்த்தியே. 5.73.7

738 வண்டு சேர்பொழில்
சூழ்மங்க லக்குடி
விண்ட தாதையைத் தாளற
வீசிய
சண்ட நாயக னுக்கருள்
செய்தவன்
துண்ட மாமதி சூடிய
சோதியே. 5.73.8

739 கூசு வாரலர் குண்டர்
குணமிலர்
நேச மேது மிலாதவர் நீசர்கள்
மாசர் பால்மங்க லக்குடி
மேவிய
ஈசன் வேறு படுக்கவுய்ந்

தேனன்றே. 5.73.9

740 மங்க லக்குடி யான்கயி
லைமலை
அங்க லைத்தெடுக் குற்ற
அரக்கர்கோன்
தன்க ரத்தொடு தாள்தலை
தோள்தகர்ந்
தங்க லைத்தழு துய்ந்தனன்
தானன்றே. 5.73.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பிராணேசவரதர்,
தேவியார் - மங்களநாயகியம்மை.

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.74 திருஎறும்பியூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

741 விரும்பி யூறு விடேல்மட
நெஞ்சமே
கரும்பி னூறல்கண் டாய்கலந்
தார்க்கவன்
இரும்பி னூறல றாததோர்
வெண்டலை
எறும்பி யூர்மலை யானெங்க
ளீசனே. 5.74.1
742 பிறங்கு செஞ்சடைப்
பிஞ்ஞகன் பேணுசீர்க்
கறங்கு பூத கணமுடைக்
கண்ணுதல்
நறுங்கு ழல்மட வாளொடு
நாடொறும்
எறும்பி யூர்மலை யானெங்க
ளீசனே. 5.74.2
743 மருந்து வானவர் தானவர்க்
கின்சுவை
புரிந்த புன்சடைப்
புண்ணியன் கண்ணுதல்
பொருந்து பூண்முலை
மங்கைநல் லாளொடும்

எறும்பி யூர்மலை யானெங்க
ளீசனே. 5.74.3

744 நிறங்கொள் கண்டத்து
நின்மலன் எம்மிறை
மறங்கொள் வேற்கண்ணி
வாணுதல் பாகமா
அறம்பு ரிந்தருள் செய்தவெம்
அங்கணன்
எறும்பி யூர்மலை யானெங்க
ளீசனே. 5.74.4

745 நறும்பொன் நாண்மலர்க்
கொன்றையு நாகமுந்
துறும்பு செஞ்சடைத் தூமதி
வைத்துவான்
உறும்பொன் மால்வரைப்
பேதையோ டூர்தொறும்
எறும்பி யூர்மலை யானெங்க
ளீசனே.
5.74.5

746 கறும்பி யூர்வன ஐந்துள
காயத்தில்
திறம்பி யூர்வன மற்றும்

பலவுள
குறும்பி யூர்வதோர் கூட்டகத்
திட்டெனை
எறும்பி யூரரன் செய்த 5.74.6
இயற்கையே.

747 மறந்து மற்றிது பேரிடர்
நாடொறுந்
திறம்பி நீநினை யேல்மட
நெஞ்சமே
புறஞ்செய் கோலக்
குரம்பையி லிட்டெனை
எறும்பி யூரரன் செய்த
இயற்கையே. 5.74.7

748 இன்ப மும்பிறப் பும்மிறப்
பின்னொடு
துன்ப மும்முட னேவைத்த
சோதியான்
அன்ப னேயர னேயென்
றரற்றுவார்க்
கின்ப னாகும் எறும்பியூ
ரீசனே. 5.74.8

749 கண்ணி றைந்த கனபவ

ளத்திரள்
விண்ணி றைந்த விரிசுடர்ச்
சோதியான்
உண்ணி றைந்துரு வாயுயி
ராயவன்
எண்ணி றைந்த எறும்பியூ
ரீசனே. 5.74.9

750 நிறங்கொள் மால்வரை
ஊன்றி யெடுத்தலும்
நறுங்கு ழல்மட வாள்நடுக்
கெய்திட
மறங்கொள் வாளரக் கன்வலி
வாட்டினான்
எறும்பி யூர்மலை எம்மிறை
காண்மினே. 5.74.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - எறும்பீசுவரர்,
தேவியார் - நறுங்குழல்நாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.75 திருக்குரக்குக்கா - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

751 மரக்கொக் காமென
வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய
ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக்
குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் 5.75.1
குற்றமே.
752 கட்டா றேகழி காவிரி
பாய்வயல்
கொட்டா றேபுன லூறு
குரக்குக்கா
முட்டா றாவடி யேத்த
முயல்பவர்க்
கிட்டா றாவிட ரோட

எடுக்குமே. 5.75.2

753 கைய னைத்துங் கலந்தெழு
காவிரி
செய்ய னைத்திலுஞ்
சென்றிடுஞ் செம்புனல்
கொய்ய னைத்துங்
கொணருங் குரக்குக்கா
ஐய னைத்தொழு வார்க்கல்ல
லில்லையே. 5.75.3

754 மிக்க னைத்துத் திசையும்
அருவிகள்
புக்குக் காவிரி போந்த
புனற்கரைக்
கொக்கி னம்பயில் சோலைக்
குரக்குக்கா
நக்க னைநவில் வார்வினை
நாசமே. 5.75.4

755 விட்டு வெள்ளம் விரிந்தெழு
காவிரி
இட்ட நீர்வய லெங்கும்
பரந்திடக்
கொட்ட மாமுழ வோங்கு

குரக்குக்கா
இட்ட மாயிருப் பார்க்கிட
ரில்லையே. 5.75.5
756 மேலை வானவ ரோடு
விரிகடல்
மாலும் நான்முக னாலுமளப்
பொணாக்
கோல மாளிகைக் கோயில்
குரக்குக்காப்
பால ராய்த்திரி வார்க்கில்லை
பாவமே. 5.75.6
757 ஆல நீழ லமர்ந்த அழகனார்
கால னையுதை கொண்ட
கருத்தனார்
கோல மஞ்ஞைகள் ஆலும்
குரக்குக்காப்
பால ருக்கருள் செய்வர்
பரிவொடே. 5.75.7
758 செக்க ரங்கெழு செஞ்சுடர்ச்
சோதியார்
அக்க ரையரெம் மாதிபு
ராணனார்

கொக்கி னம்வயல் சேருங்
குரக்குக்கா
நக்க னைத்தொழ நம்வினை
நாசமே. 5.75.8

759 உருகி ஊன்குழைந் தேத்தி
யெழுமின்நீர்
கரிய கண்டன் கழலடி
தன்னையே
குரவ னஞ்செழுங் கோயில்
குரக்குக்கா
இரவும் எல்லியும் ஏத்தித்
தொழுமினே. 5.75.9

760 இரக்க மின்றி மலையெடுத்
தான்முடி
உரத்தை யொல்க அடர்த்தா
னுறைவிடங்
குரக்கி னங்குதி கொள்ளுங்
குரக்குக்கா
வரத்த னைப்பெற வானுல
காள்வரே. 5.75.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கொந்தளக்கருணைநாதர்,
தேவியார் - கொந்தளநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.76 திருக்கானூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

761 திருவின் நாதனுஞ் செம்மலர்
மேலுறை
உருவ னாயுல கத்தி
னுயிர்க்கெலாங்
கருவ னாகி முளைத்தவன்
கானூரிற்
பரம னாய பரஞ்சுடர்
காண்மினே. 5.76.1
762 பெண்டிர் மக்கள்
பெருந்துணை நன்னிதி

உண்டின் றேயென்
றுகவன்மின் ஏழைகாள்
கண்டு கொண்மின்நீர் கானூர்
முளையினைப்
புண்ட ரீகப் பொதும்பி 5.76.2
லொதுங்கியே.

763 தாயத் தார்தமர் நன்னிதி
யென்னுமிம்
மாயத் தேகிடந் திட்டு
மயங்கிடேல்
காயத் தேயுளன் கானூர்
முளையினை
வாயத் தால்வணங் கீர்வினை
மாயவே. 5.76.3

764 குறியில் நின்றுண்டு கூறையி
லாச்சமண்
நெறியை விட்டு நிறைகழல்
பற்றினேன்
அறிய லுற்றிரேல் கானூர்
முளையவன்
செறிவு செய்திட்
டிருப்பதென் சிந்தையே. 5.76.4

765 பொத்தல் மண்சுவர்ப்
பொல்லாக் குரம்பையை
மெய்த்த னென்று
வியந்திடேல் ஏழைகாள்
சித்தர் பத்தர்கள் சேர்திருக்
கானூரில்
அத்தன் பாத மடைதல்
கருமமே. 5.76.5
766 கல்வி ஞானக் கலைப்பொரு
ளாயவன்
செல்வ மல்கு திருக்கானூ
ரீசனை
எல்லி யும்பக லும்மிசை
வானவர்
சொல்லி டீர்நுந் துயரங்கள்
தீரவே.
5.76.6
767 நீரும் பாரும் நெருப்பும்
அருக்கனுங்
காரு மாருதங் கானூர்
முளைத்தவன்
சேர்வு மொன்றறி யாது

திசைதிசை
ஓர்வு மொன்றில ரோடித்
திரிவரே. 5.76.7

768 ஓமத் தோடயன் மாலறி
யாவணம்
வீமப் பேரொளி யாய
விழுப்பொருள்
காமற் காய்ந்தவன் கானூர்
முளைத்தவன்
சேமத் தாலிருப் பாவதென்
சிந்தையே. 5.76.8

இப்பதிகத்தில் 9-ம் செய்யுள்
சிதைந்து போயிற்று. 5.76.9

769 வன்னி கொன்றை
எருக்கணிந் தான்மலை
உன்னி யேசென்
றெடுத்தவன் ஒண்டிறல்
தன்னை வீழத் தனிவிரல்
வைத்தவன்
கன்னி மாமதிற் கானூர்க்
கருத்தனே. 5.76.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - செம்மேனிநாயகர்,
தேவியார் - சிவயோகநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

[உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப](#)

---

## 5.77 திருச்சேறை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

770 பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடுங்
கூரி தாய அறிவுகை கூடிடுஞ்
சீரி யார்பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்றன் நாமம் நவிலவே. 5.77.1

771 என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேதவி

ழுப்பொருள்
செந்நெ லார்வயல் சேறையுட்
செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து 5.77.2
வைகவே.

772 பிறப்பு மூப்புப் பெரும்பசி
வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந்
தெய்திடுஞ்
சிறப்பர் சேறையுட் செந்நெறி
யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள்
வைக்கவே.
5.77.3

773 மாடு தேடி மயக்கினில்
வீழ்ந்துநீர்
ஓடி யெய்த்தும் பயனிலை
ஊமர்காள்
சேடர் வாழ்சேறைச்
செந்நெறி மேவிய
ஆட லான்றன் அடியடைந்
துய்ம்மினே. 5.77.4

774 எண்ணி நாளும் எரியயிற்
கூற்றுவன்
துண்ணென் றோன்றிற்
றுரக்கும் வழிகண்டேன்
திண்ணன் சேறைத் திருச்செந்
நெறியுறை
அண்ண லாருளர் அஞ்சுவ 5.77.5
தென்னுக்கே.

775 தப்பில் வானந் தரணிகம்
பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன்
சீறிலென்
செப்ப மாஞ்சேறைச்
செந்நெறி மேவிய
அப்ப னாருளர் அஞ்சுவ
தென்னுக்கே. 5.77.6

776 வைத்த மாடும் மடந்தைநல்
லார்களும்
ஒத்தொவ் வாதவுற் றார்களு
மென்செய்வார்
சித்தர் சேறைத் திருச்செந்
நெறியுறை

அத்தர் தாமுளர் அஞ்சுவ
தென்னுக்கே. 5.77.7

777 குலங்க ளென்செய்வ
குற்றங்க ளென்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல்
நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி
மேவிய
அலங்க னாருளர் அஞ்சுவ
தென்னுக்கே. 5.77.8

778 பழகி னால்வரும் பண்டுள
சுற்றமும்
விழவி டாவிடில் வேண்டிய
எய்தொணா
திகழ்கொள் சேறையிற்
செந்நெறி மேவிய
அழக னாருளர் அஞ்சுவ
தென்னுக்கே. 5.77.9

779 பொருந்து நீண்மலை
யைப்பிடித் தேந்தினான்
வருந்த வூன்றி மலரடி
வாங்கினான்

திருந்து சேறையிற் செந்நெறி
மேவியங்
கிருந்த சோதியென் பார்க்கிட
ரில்லையே. 5.77.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - செந்நெறியப்பர்,
தேவியார் - ஞானவல்லியம்மை.
திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## **5.78** திருக்கோடிகா - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

780 சங்கு லாமுன்கைத்
தையலோர் பாகத்தன்
வெங்கு லாமத வேழம்
வெகுண்டவன்
கொங்கு லாம்பொழிற்

கோடிகா வாவென
எங்கி லாததோர் இன்பம்வந்
தெய்துமே. 5.78.1

781 வாடி வாழ்வதென் னாவது
மாதர்பால்
ஓடி வாழ்வினை உள்கிநீர்
நாடொறுங்
கோடி காவனைக் கூறீரேற்
கூறினேன்
பாடி காவலிற் பட்டுக்
கழிதிரே. 5.78.2

782 முல்லை நன்முறு வல்லுமை
பங்கனார்
தில்லை யம்பலத் தில்லுறை
செல்வனார்
கொல்லை யேற்றினர்
கோடிகா வாவென்றங்
கொல்லை யேத்துவார்க்
கூனமொன் றில்லையே. 5.78.3

783 நாவ ளம்பெறு மாறும
னன்னுதல்
ஆம ளஞ்சொலி அன்புசெ

யின்னலாற்
கோம ளஞ்சடைக் கோடிகா
வாவென
ஏவ ளின்றெனை ஏசுமவ்
வேழையே. 5.78.4

784 வீறு தான்பெறு வார்சில
ராகிலும்
நாறு பூங்கொன்றை தான்மிக
நல்கானேற்
கூறு வேன்கோடி காவுளாய்
என்றுமால்
ஏறு வேனும்மால் ஏசப்
படுவனோ. 5.78.5

785 நாடி நாரணன் நான்முகன்
வானவர்
தேடி யேசற வுந்தெரி
யாததோர்
கோடி காவனைக் கூறாத
நாளெலாம்
பாடி காவலிற் பட்டுக்
கழியுமே. 5.78.6

இப்பதிகத்தில் 7,8,9-ம் 5.78.7-

செய்யுட்கள் சிதைந்து போயின. 9

- வரங்க ளால்வரை
786 யையெடுத் தான்றனை
அரங்க வூன்றி யருள்செய்த அப்பனூர்
குரங்கு சேர்பொழிற் கோடிகா வாவென
இரங்கு வேன்மனத் தேதங்கள் தீரவே. 5.78.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கோடீசுவரர், தேவியார் - வடிவாம்பிகையம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.79 திருப்புள்ளிருக்குவேளூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

787 வெள்ளெ ருக்கர வம்விர
வுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன்
பொற்கழல்
உள்ளி ருக்கு முணர்ச்சியில்
லாதவர்
நள்ளி ருப்பர் நரகக்
குழியிலே. 5.79.1
788 மாற்ற மொன்றறி யீர்மனை
வாழ்க்கைபோய்க்
கூற்றம் வந்துமைக்
கொள்வதன் முன்னமே
போற்ற வல்லிரேற் புள்ளிருக்
குவேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங்
காண்மினே. 5.79.2
789 அரும றையனை ஆணொடு
பெண்ணனைக்
கருவி டம்மிக வுண்டவெங்
கண்டனைப்

புரிவெண் ணூலனைப்
புள்ளிருக் குவேளூர்
உருகி நைபவர் உள்ளங் 5.79.3
குளிருமே.

790 தன்னு ருவை யொருவர்க்
கறிவொணா
மின்னு ருவனை
மேனிவெண் ணீற்றனைப்
பொன்னு ருவனைப்
புள்ளிருக் குவேளூர்
என்ன வல்லவர்க் கில்லை
யிடர்களே. 5.79.4

791 செங்கண் மால்பிர மற்கு
மறிவொணா
அங்கி யின்னுரு வாகி
அழல்வதோர்
பொங்க ரவனைப் புள்ளிருக்
குவேளூர்
மங்கை பாகனை வாழ்த்த
வருமின்பே. 5.79.5

792 குற்ற மில்லியைக் கோலச்
சிலையினாற்

செற்ற வர்புரஞ் செந்தழ
லாக்கியைப்
புற்ற ரவனைப் புள்ளிருக்
குவேளூர்
பற்ற வல்லவர் பாவம்
பறையுமே. 5.79.6

793 கையி னோடுகால் கட்டி
யுமரெலாம்
ஐயன் வீடினன் என்பதன்
முன்னம்நீர்
பொய்யி லாவரன் புள்ளிருக்
குவேளூர்
மையு லாவிய கண்டனை
வாழ்த்துமே. 5.79.7

794 உள்ளம் உள்கி உகந்து
சிவனென்று
மெள்ள வுள்க வினைகெடும்
மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்
குவேளூர்
வள்ளல் பாதம் வணங்கித்

தொழுமினே. 5.79.8

இப்பதிகத்தில் 9-ம் செய்யுள்
சிதைந்து போயிற்று. 5.79.9

795 அரக்க னார்தலை பத்தும்
அழிதர
நெருக்கி மாமலர்ப் பாதம்
நிறுவிய
பொருப்ப னாருறை
புள்ளிருக் குவேளூர்
விருப்பி னாற்றொழு
வார்வினை வீடுமே. 5.79.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - வைத்தியநாதர், தேவியார்
- தையல்நாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.80 திருஅன்பில்ஆலந்துறை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

796 வானஞ் சேர்மதி சூடிய
மைந்தனை
நீநெஞ் சேகெடு வாய்நினை
கிற்கிலை
ஆனஞ் சாடியை அன்பிலா
லந்துறைக்
கோனெஞ் செல்வனைக்
கூறிடக் கிற்றியே. 5.80.1
797 கார ணத்தர் கருத்தர்
கபாலியார்
வார ணத்துரி போர்த்த
மணாளனார்
ஆர ணப்பொருள் அன்பிலா
லந்துறை
நார ணற்கரி யானொரு
நம்பியே. 5.80.2
798 அன்பினா னஞ்ச மைந்துட
னாடிய
என்பின் ஆனை யுரித்துக்
களைந்தவன்

அன்பி லானையம்
மானையள் ளூறிய
அன்பி னால்நினைந் தாரறிந் 5.80.3
தார்களே.

799 சங்கை யுள்ளதுஞ் சாவது
மெய்யுமை
பங்க னாரடி பாவியே
னானுய
அங்க ணனெந்தை அன்பிலா
லந்துறைச்
செங்க ணாரடிச் சேரவும்
வல்லனே. 5.80.4

800 கொக்கி றகர் குளிர்மதிச்
சென்னியர்
மிக்க ரக்கர் புரமெரி
செய்தவர்
அக்க ரையினர் அன்பிலா
லந்துறை
நக்கு ருவரும் நம்மை
யறிவரே. 5.80.5

801 வெள்ள முள்ள விரிசடை
நந்தியைக்

கள்ள முள்ள மனத்தவர்
காண்கிலார்
அள்ள லார்வயல் அன்பிலா
லந்துறை
உள்ள வாறறி யார்சிலர்
ஊமரே. 5.80.6

802 பிறவி மாயப் பிணக்கில்
அழுந்தினும்
உறவெ லாஞ்சிந்தித் துன்னி
உகவாதே
அறவன் எம்பிரான்
அன்பிலா லந்துறை
மறவா தேதொழு தேத்தி
வணங்குமே. 5.80.7

803 நுணங்கு நூலயன் மாலும்
இருவரும்
பிணங்கி யெங்குந்
திரிந்தெய்த்துங் காண்கிலா
அணங்கன் எம்பிரான்
அன்பிலா லந்துறை
வணங்கும் நும்வினை
மாய்ந்தறும் வண்ணமே.

5.80.8

804 பொய்யெ லாமுரைக்
குஞ்சமண் சாக்கியக்
கையன் மாருரை கேளா
தெழுமினோ
ஐயன் எம்பிரான் அன்பிலா
லந்துறை
மெய்யன் சேவடி யேத்துவார்
மெய்யரே. 5.80.9

805 இலங்கை வேந்தன் இருபது
தோளிற்று
மலங்க மாமலை மேல்விரல்
வைத்தவன்
அலங்கல் எம்பிரான்
அன்பிலா லந்துறை
வலங்கொள் வாரைவா
னோர்வலங் கொள்வரே. 5.80.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சத்திவாகீசர், தேவியார் -
சவுந்தரநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.81** திருப்பாண்டிக்கொடுமுடி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

806 சிட்ட னைச்சிவ னைச்செழுஞ்
சோதியை
அட்ட மூர்த்தியை ஆல
நிழலமர்
பட்ட னைத்திருப் பாண்டிக்
கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை
நாசமே. 5.81.1
807 பிரமன் மாலறி யாத
பெருமையன்
தரும மாகிய தத்துவன்
எம்பிரான்
பரம னாருறை பாண்டிக்

கொடுமுடி
கரும மாகத் தொழுமட 5.81.2
நெஞ்சமே.
808 ஊச லாளல்லள் ஒண்கழ
லாளல்லள்
தேச மாந்திருப் பாண்டிக்
கொடுமுடி
ஈச னேயெனும் இத்தனை
யல்லது
பேசு மாறறி யாளொரு
பேதையே. 5.81.3
809 தூண்டி யசுடர் போலொக்குஞ்
சோதியான்
காண்ட லுமெளி யன்னடி
யார்கட்குப்
பாண்டிக் கொடுமுடி மேய
பரமனைக்
காண்டு மென்பவர்க் கேதுங்
கருத்தொணான். 5.81.4
810 நெருக்கி யம்முடி நின்றிசை
வானவர்
இருக்கொ டும்பணிந் தேத்த

இருந்தவன்
திருக்கொ டுமுடி யென்றலுந்
தீவினைக்
கருக்கெ டுமிது கைகண்ட
யோகமே. 5.81.5

இப்பதிகத்தில் 6,7,8,9,10-ம்
செய்யுட்கள் சிதைந்து 5.81.6-10
போயின.

இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கொடுமுடிநாதேசுவரர்,
தேவியார் - பண்மொழிநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.82 திருவான்மியூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

811 விண்ட மாமலர் கொண்டு

விரைந்துநீர்
அண்ட நாயகன் றன்னடி
சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம்
பறைந்திடும்
வண்டு சேர்பொழில்
வான்மியூ ரீசனே. 5.82.1

812 பொருளுஞ் சுற்றமும்
பொய்ம்மையும் விட்டுநீர்
மருளும் மாந்தரை மாற்றி
மயக்கறுத்
தருளு மாவல்ல ஆதியா
யென்றலும்
மருள றுத்திடும் வான்மியூ
ரீசனே. 5.82.2

813 மந்த மாகிய சிந்தை
மயக்கறுத்
தந்த மில்குணத் தானை
யடைந்துநின்
றெந்தை யீசனென் றேத்திட
வல்லிரேல்
வந்து நின்றிடும் வான்மியூ

ரீசனே. 5.82.3

814 உள்ள முள்கலந் தேத்தவல்
லார்க்கலாற்
கள்ள முள்ள வழிக்கசி
வானலன்
வெள்ள முமர வும்விர
வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ
ரீசனே.
5.82.4

815 படங்கொள் பாம்பரைப்
பான்மதி சூடியை
வடங்கொள் மென்முலை
மாதொரு கூறனைத்
தொடர்ந்து நின்று
தொழுதெழு வார்வினை
மடங்க நின்றிடும் வான்மியூ
ரீசனே. 5.82.5

816 நெஞ்சி லைவர் நினைக்க
நினைக்குறார்
பஞ்சின் மெல்லடி யாளுமை
பங்கவென்

றஞ்சி நாண்மலர் தூவி
யழுதிரேல்
வஞ்சந் தீர்த்திடும் வான்மியூ 5.82.6
ரீசனே.

817 நுணங்கு நூலயன் மாலு
மறிகிலாக்
குணங்கள் தாம்பர
விக்குறைந் துக்கவர்
சுணங்கு பூண்முலைத்
தூமொழி யாரவர்
வணங்க நின்றிடும்
வான்மியூ ரீசனே. 5.82.7

818 ஆதி யும்மர னாயயன்
மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாய
பரமனென்
றோதி யுள்குழைந் தேத்தவல்
லாரவர்
வாதை தீர்த்திடும் வான்மியூ
ரீசனே. 5.82.8

819 ஒட்டை மாடத்தி லொன்பது

வாசலுங்
காட்டில் வேவதன் முன்னங்
கழலடி
நாட்டி நாண்மலர் தூவி
வலஞ்செயில்
வாட்டந் தீர்த்திடும் வான்மியூ 5.82.9
ரீசனே.

820 பார மாக மலையெடுத்
தான்றனைச்
சீர மாகத் திருவிர
லூன்றினான்
ஆர்வ மாக அழைத்தவ
னேத்தலும்
வார மாயினன் வான்மியூ
ரீசனே. 5.82.10

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மருந்தீசுவரர், தேவியார் - சொக்கநாயகியம்மை.

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

## 5.83 திருநாகைக்காரோணம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

821 பாணத் தான்மதில் மூன்று
மெரித்தவன்
பூணத் தானர வாமை
பொறுத்தவன்
காணத் தானினி யான்கடல்
நாகைக்கா
ரோணத் தானென நம்வினை
ஓயுமே. 5.83.1

822 வண்ட லம்பிய வார்சடை
ஈசனை
விண்ட லம்பணிந் தேத்தும்
விகிர்தனைக்
கண்ட லங்கமழ் நாகைக்கா
ரோணனைக்
கண்ட லும்வினை யான
கழலுமே. 5.83.2

823 புனையு மாமலர் கொண்டு
புரிசடை
நனையு மாமலர் சூடிய
நம்பனைக்
கனையும் வார்கடல்
நாகைக்கா ரோணனை
நினைய வேவினை யாயின
நீங்குமே. 5.83.3

824 கொல்லை மால்விடை
யேறிய கோவினை
எல்லி மாநட மாடும்
இறைவனைக்
கல்லி னார்மதில் நாகைக்கா
ரோணனைச்
சொல்ல வேவினை
யானவை சோருமே. 5.83.4

825 மெய்ய னைவிடை யூர்தியை
வெண்மழுக்
கைய னைக்கடல் நாகைக்கா
ரோணனை
மைய னுக்கிய கண்டனை
வானவர்

ஐய னைத்தொழு வார்க்கல்ல
லில்லையே. 5.83.5

826 அலங்கல் சேர்சடை ஆதி
புராணனை
விலங்கல் மெல்லியல் பாகம்
விருப்பனைக்
கலங்கள் சேர்கடல்
நாகைக்கா ரோணனை
வலங்கொள் வார்வினை
யாயின மாயுமே. 5.83.6

827 சினங்கொள் மால்கரி சீறிய
ஏறினை
இனங்கொள் வானவ
ரேத்திய ஈசனைக்
கனங்கொள் மாமதில்
நாகைக்கா ரோணனை
மனங்கொள் வார்வினை
யாயின மாயுமே. 5.83.7

828 அந்த மில்புகழ் ஆயிழை
யார்பணிந்
தெந்தை யீசனென் றேத்தும்

இறைவனைக்
கந்த வார்பொழில் நாகைக்கா
ரோணனைச்
சிந்தை செய்யக் கெடுந்துயர் 5.83.8
திண்ணமே.

829 கருவ னைக்கடல் நாகைக்கா
ரோணனை
இருவ ருக்கறி வொண்ணா
இறைவனை
ஒருவ னையுண ரார்புர
மூன்றெய்த
செருவ னைத்தொழத்
தீவினை தீருமே. 5.83.9

830 கடல்க ழிதழி நாகைக்கா
ரோணன்றன்
வடவ ரையெடுத் தார்த்த
அரக்கனை
அடர வூன்றிய பாதம்
அணைதரத்
தொடர அஞ்சுந் துயக்கறுங்
காலனே.
5.83.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - காயாரோகணேசுவரர்,
தேவியார் - நீலயதாட்சியம்மை.
திருச்சிற்றம்பலம்

[உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப](#)

---

## **5.84** திருக்காட்டுப்பள்ளி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

831 மாட்டுப் பள்ளி மகிழ்ந்துறை
வீர்க்கெலாங்
கேட்டுப் பள்ளிகண் டீர்கெடு
வீரிது
ஓட்டுப் பள்ளிவிட் டோ ட
லுறாமுனங்
காட்டுப் பள்ளியு ளான்கழல்
சேர்மினே. 5.84.1

832 மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர்
நும்முளே
நாட்டுப் பொய்யெலாம்
பேசிடு நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன்
முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் 5.84.2
சேர்மினே.

833 தேனை வென்றசொல்
லாளொடு செல்வமும்
ஊனை விட்டுயிர் போவதன்
முன்னமே
கான வேடர் கருதுங்காட்
டுப்பள்ளி
ஞான நாயக னைச்சென்று
நண்ணுமே.
5.84.3

834 அருத்த மும்மனை யாளொடு
மக்களும்
பொருத்த மில்லை
பொல்லாதது போக்கிடுங்
கருத்தன் கண்ணுதல்

அண்ணல்காட் டுப்பள்ளித்
திருத்தன் சேவடி 5.84.4
யைச்சென்று சேர்மினே.

835 சுற்ற முந்துணை யும்மனை
வாழ்க்கையும்
அற்ற போதணை யாரவ
ரென்றென்றே
கற்ற வர்கள் கருதுங்காட்
டுப்பள்ளிப்
பெற்ற மேறும் பிரானடி
சேர்மினே. 5.84.5

836 அடும்புங் கொன்றையும்
வன்னியும் மத்தமுந்
துடும்பல் செய்சடைத்
தூமணிச் சோதியான்
கடம்பன் தாதை கருதுங்காட்
டுப்பள்ளி
உடம்பி னார்க்கோர்
உறுதுணை யாகுமே.
5.84.6

837 மெய்யின் மாசுடை யாருடல்
மூடுவார்

பொய்யை மெய்யென்று
புக்குடன் வீழன்மின்
கையின் மானுடை
யான்காட்டுப் பள்ளியெம்
ஐயன் றன்னடி யேயடைந் 5.84.7
துய்மினே.
838 வேலை வென்றகண் ணாரை
விரும்பிநீர்
சீலங் கெட்டுத் திகையன்மின்
பேதைகாள்
காலை யேதொழுங்
காட்டுப்பள் ளியுறை
நீல கண்டனை நித்தல்
நினைமினே. 5.84.8
839 இன்று ளார்நாளை இல்லை
யெனும்பொருள்
ஒன்று மோரா துழிதரும்
ஊமர்காள்
அன்று வானவர்க் காக
விடமுண்ட
கண்ட னார்காட்டுப்
பள்ளிகண் டுய்ம்மினே.

5.84.9

840 எண்ணி லாவரக் கன்மலை
யேந்திட
எண்ணி நீண்முடி பத்து
மிறுத்தவன்
கண்ணு ளார்கரு துங்காட்டுப்
பள்ளியை
நண்ணு வாரவர் தம்வினை
நாசமே. 5.84.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - ஆரணியசுந்தரர்,
தேவியார் - அகிலாண்டநாயகியம்மை.
திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## **5.85** திருச்சிராப்பள்ளி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

841 மட்டு வார்குழ லாளொடு
மால்விடை
இட்ட மாவுகந் தேறும்
இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு
ளேசெயுஞ்
சிட்டர் போலுஞ்
சிராப்பள்ளிச் செல்வரே. 5.85.1
842 அரிய யன்றலை வெட்டிவட்
டாடினார்
அரிய யன்றொழு தேத்தும்
அரும்பொருள்
பெரிய வன்சிராப்
பள்ளியைப் பேணுவார்
அரிய யன்றொழ அங்கிருப்
பார்களே. 5.85.2
843 அரிச்சி ராப்பகல் ஐவரா
லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று
சொல்லக்கேள்
திரிச்சி ராப்பள்ளி யென்றலுந்
தீவினை

நரிச்சி ராது நடக்கும் நடக்குமே. 5.85.3

844 தாயு மாயெனக் கேதலை கண்ணுமாய்ப்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே. 5.85.4

இப்பதிகத்தில் 5,6,7,8,9,10-ம் செய்யுட்கள் சிதைந்து போயின. 5.85.5-10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - தாயுமானேசுவரர்,
தேவியார் - மட்டுவார்குழலம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

## 5.86 திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

845 கால பாசம் பிடித்தெழு
தூதுவர்
பால கர்விருத் தர்பழை
யாரெனார்
ஆல நீழ லமர்ந்தவாட்
போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள்
நிற்பரே. 5.86.1

846 விடுத்த தூதுவர் வந்து
வினைக்குழிப்
படுத்த போது பயனிலை
பாவிகாள்
அடுத்த கின்னரங்
கேட்கும்வாட் போக்கியை
எடுத்து மேத்தியும் இன்புறு
மின்களே.
5.86.2

847 வந்திவ் வாறு வளைத்தெழு
தூதுவர்
உந்தி யோடி நரகத்
திடாமுனம்
அந்தி யின்னொளி
தாங்கும்வாட் போக்கியார் 5.86.3
சிந்தி யாவெழு வார்வினை
தீர்ப்பரே.
848 கூற்றம் வந்து குமைத்திடும்
போதினாற்
தேற்றம் வந்து தெளிவுற
லாகுமே
ஆற்ற வுமருள் செய்யும்வாட்
போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள்
நீங்கவே. 5.86.4
849 மாறு கொண்டு வளைத்தெழு
தூதுவர்
வேறு வேறு படுப்பதன்
முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட்
போக்கியார்க்

கூறி யூறி உருகுமென்
னுள்ளமே. 5.86.5

850 கான மோடிக் கடிதெழு
தூதுவர்
தான மோடு தலைபிடி
யாமுனம்
ஆனஞ் சாடி யுகந்தவாட்
போக்கியார்
ஊன மில்லவர்க்
குண்மையில் நிற்பரே. 5.86.6

851 பார்த்துப் பாசம் பிடித்தெழு
தூதுவர்
கூர்த்த வேலாற் குமைப்பதன்
முன்னமே
ஆர்த்த கங்கை யடக்கும்வாட்
போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை
மின்களே.
5.86.7

852 நாடி வந்து நமன்தமர்
நல்லிருள்
கூடி வந்து குமைப்பதன்

முன்னமே
ஆடல் பாடல் உகந்தவாட்
போக்கியை
வாடி யேத்தநம் வாட்டந் 5.86.8
தவிருமே.
853 கட்ட றுத்துக் கடிதெழு
தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படா
முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட்
போக்கியார்க்
கிட்ட மாகி யிணையடி
யேத்துமே. 5.86.9
854 இரக்க முன்னறி யாதெழு
தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன்
முன்னமே
அரக்க னுக்கருள் செய்தவாட்
போக்கியார்
கரப்ப துங்கரப் பாரவர்
தங்கட்கே.

5.86.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - இரத்தினகிரீசுவரர்,
தேவியார் - சுரும்பார்குழலம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.87 திருமணஞ்சேரி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

855 பட்ட நெற்றியர் பாய்புலித்
தோலினர்
நட்ட நின்று நவில்பவர்
நாடொறுஞ்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ்
சேரியெம்
வட்ட வார்சடை
யார்வண்ணம் வாழ்த்துமே. 5.87.1
856 துன்னு வார்குழ லாளுமை

யாளொடும்
பின்னு வார்சடை மேற்பிறை
வைத்தவர்
மன்னு வார்மணஞ் சேரி
மருந்தினை
உன்னு வார்வினை யாயின 5.87.2
ஒயுமே.
857 புற்றி லாடர வாட்டும்
புனிதனார்
தெற்றி னார்புரந் தீயெழச்
செற்றவர்
சுற்றி னார்மதில் சூழ்மணஞ்
சேரியார்
பற்றி னாரவர் பற்றவர்
காண்மினே. 5.87.3
858 மத்த மும்மதி யும்வளர்
செஞ்சடை
முத்தர் முக்குணர் மூசர
வம்மணி
சித்தர் தீவணர் சீர்மணஞ்
சேரியெம்
வித்தர் தாம்விருப் பாரை

விருப்பரே. 5.87.4

859 துள்ளு மான்மறி தூமழு
வாளினர்
வெள்ள நீர்கரந் தார்சடை
மேலவர்
அள்ள லார்வயல் சூழ்மணஞ்
சேரியெம்
வள்ள லார்கழல்
வாழ்த்தவாழ் வாவதே. 5.87.5

860 நீர்ப ரந்த நிமிர்புன்
சடையின்மேல்
ஊர்ப ரந்த உரகம் அணிபவர்
சீர்ப ரந்த திருமணஞ்
சேரியார்
ஏர்ப ரந்தங் கிலங்குசூ
லத்தரே. 5.87.6

861 சுண்ணத் தர்சுடு நீறுகந்
தாடலார்
விண்ணத் தம்மதி சூடிய
வேதியர்
மண்ணத் தம்முழ வார்மணஞ்
சேரியார்

வண்ணத் தம்முலை
யாளுமை வண்ணரே. 5.87.7
துன்ன வாடையர் தூமழு
862 வாளினர்
பின்னு செஞ்சடை
மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்பொழில்
சூழ்மணஞ் சேரியெம்
மன்ன னார்கழ லேதொழ
வாய்க்குமே. 5.87.8
863 சித்தர் தேவர்கள் மாலொடு
நான்முகன்
புத்தர் தேரமண் கையர்
புகழவே
மத்தர் தாமறி யார்மணஞ்
சேரியெம்
அத்த னாரடி யார்க்கல்ல
லில்லையே. 5.87.9
864 கடுத்த மேனி அரக்கன்
கயிலையை
எடுத்த வனெடு நீண்முடி
பத்திறப்

படுத்த லுமணஞ் சேரி
யருளெனக்
கொடுத்த னன்கொற்ற
வாளொடு நாமமே. 5.87.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - அருள்வள்ளல்நாயகர்,
தேவியார் - யாழின்மொழியம்மை.
திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## 5.88 திருமருகல் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

865 பெருக லாந்தவம் பேதைமை
தீரலாந்
திருக லாகிய சிந்தை
திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ

ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி
வணங்கவே. 5.88.1
866 பாடங் கொள்பனு வற்றிறங்
கற்றுப்போய்
நாடங் குள்ளன தட்டிய
நாணிலீர்
மாடஞ் சூழ்மரு கற்பெரு
மான்றிரு
வேடங் கைதொழ வீடெளி
தாகுமே. 5.88.2
867 சினத்தி னால்வருஞ்
செய்தொழி லாமவை
அனைத்தும் நீங்கிநின் றாதர
வாய்மிக
மனத்தி னால்மரு கற்பெரு
மான்றிறம்
நினைப்பி னார்க்கில்லை
நீணில வாழ்க்கையே. 5.88.3
868 ஓது பைங்கிளிக் கொண்பால்
அமுதூட்டிப்
பாது காத்துப் பலபல

கற்பித்து
மாது தான்மரு கற்பெரு
மானுக்குத்
தூது சொல்ல விடத்தான்
தொடங்குமே. 5.88.4
869 இன்ன வாறென்ப துண்டறி
யேனின்று
துன்னு கைவளை சோரக்கண்
நீர்மல்கும்
மன்னு தென்மரு கற்பெரு
மான்றிறம்
உன்னி யொண்கொடி உள்ள
முருகுமே. 5.88.5
870 சங்கு சோரக் கலையுஞ்
சரியவே
மங்கை தான்மரு கற்பெரு
மான்வரும்
அங்க வீதி அருகணை
யாநிற்கும்
நங்கை மீரிதற்
கென்செய்கேன் நாளுமே. 5.88.6
871 காட்சி பெற்றில ளாகிலுங்

காதலே
மீட்சி யொன்றறி யாது
மிகுவதே
மாட்சி யார்மரு கற்பெரு
மானுக்குத்
தாழ்ச்சி சாலவுண் டாகுமென்
தையலே. 5.88.7

872 நீடு நெஞ்சுள் நினைந்துகண்
ணீர்மல்கும்
ஓடு மாலினோ டொண்கொடி
மாதராள்
மாட நீண்மரு கற்பெரு
மான்வரிற்
கூடு நீயென்று கூட
லிழைக்குமே. 5.88.8

873 கந்த வார்குழல் கட்டிலள்
காரிகை
அந்தி மால்விடை யோடுமன்
பாய்மிக
வந்தி டாய்மரு கற்பெரு
மானென்று
சிந்தை செய்து திகைத்திடுங்

காண்மினே. 5.88.9

874 ஆதி மாமலை அன்றெடுத்
தானிற்றுச்
சோதி யென்றலுந்
தொல்லருள் செய்திடும்
ஆதி யான்மரு கற்பெரு
மான்றிறம்
ஓதி வாழ்பவர் உம்பர்க்கும்
உம்பரே. 5.88.10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மாணிக்கவண்ணவீசுவரர்,
தேவியார் - வண்டுவார்குழலம்மை.
திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.89 தனி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

875 ஒன்று வெண்பிறைக்
கண்ணியோர் கோவணம்
ஒன்று கீளுமை யோடு
முடுத்தது
ஒன்று வெண்டலை
யேந்தியெம் முள்ளத்தே
ஒன்றி நின்றங் குறையும்
ஒருவனே. 5.89.1
876 இரண்டு மாமவர்க் குள்ளன
செய்தொழில்
இரண்டு மாமவர்க் குள்ளன
கோலங்கள்
இரண்டு மில்லிள மானெமை
யாளுகந்
திரண்டு போதுமென்
சிந்தையுள் வைகுமே. 5.89.2
877 மூன்று மூர்த்தியுள் நின்றிய
லுந்தொழில்
மூன்று மாயின மூவிலைச்
சூலத்தன்
மூன்று கண்ணினன்
தீத்தொழில் மூன்றினன்

மூன்று போதுமென் 5.89.3
சிந்தையுள் மூழ்குமே.
878 நாலின் மேன்முகஞ் செற்றது
மன்னிழல்
நாலு நன்குணர்ந் திட்டது
மின்பமாம்
நாலு வேதஞ் சரித்தது
நன்னெறி
நாலு போலெம் அகத்துறை
நாதனே. 5.89.4
879 அஞ்சு மஞ்சுமோ ராடி
யரைமிசை
அஞ்சு போலரை யார்த்ததின்
றத்துவம்
அஞ்சு மஞ்சுமோ ரோரைஞ்சு
மாயவன்
அஞ்சு மாமெம் அகத்துறை
ஆதியே. 5.89.5
880 ஆறு கால்வண்டு மூசிய
கொன்றையன்
ஆறு சூடிய அண்ட

முதல்வனார்
ஆறு கூர்மையர்க் கச்சம
யப்பொருள்
ஆறு போலெம் அகத்துறை 5.89.6
ஆதியே.

881 ஏழு மாமலை ஏழ்பொழில்
சூழ்கடல்
ஏழு போற்றுமி ராவணன்
கைந்நரம்
பேழு கேட்டருள் செய்தவன்
பொற்கழல்
ஏழுஞ் சூழடி யேன்மனத்
துள்ளவே.
5.89.7

882 எட்டு மூர்த்தியாய் நின்றிய
லுந்தொழில்
எட்டு வான்குணத் தீசனெம்
மான்றனை
எட்டு மூர்த்தியு மெம்மிறை
யெம்முளே
எட்டு மூர்த்தியு மெம்மு
ளொடுங்குமே. 5.89.8

883 ஒன்ப தொன்பதி யானை
யொளிகளி
றொன்ப தொன்பது
பல்கணஞ் சூழவே
ஒன்ப தாமவை தீத்தொழி
லின்னுரை
ஒன்ப தொத்துநின் றென்னு 5.89.9
ளொடுங்குமே.

884 பத்து நூறவன்
வெங்கண்வெள்
ளேற்றண்ணல்
பத்து நூறவன் பல்சடை
தோண்மிசை
பத்தி யாமில மாதலின்
ஞானத்தாற்
பத்தி யானிடங் கொண்டது
பள்ளியே. 5.89.10

திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

## 5.90 தனி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

885 மாசில் வீணையும் மாலை
மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள
வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி
நீழலே. 5.90.1
886 நமச்சி வாயவே ஞானமுங்
கல்வியும்
நமச்சி வாயவே நானறி
விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்
றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி
காட்டுமே. 5.90.2
887 ஆளா காராளா னாரை
அடைந்துய்யார்

மீளா வாட்செய்து
மெய்ம்மையுள் நிற்கிலார்
*தோளா தசுரை
யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக்
கழிவரே.
* தோளாத சுரையென்பது
துவாரமிடாத சுரைக்காய் 5.90.3
888 நடலை வாழ்வுகொண்
டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர
மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர்
கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி
பண்டமே. 5.90.4
889 பூக்கைக் கொண்டரன்
பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம்
நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி
அலமந்து

காக்கைக் கேயிரை யாகிக்
கழிவரே. 5.90.5
890 குறிக ளுமடை யாளமுங்
கோயிலும்
நெறிக ளுமவர் நின்றதோர்
நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம்
ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல்
புகாததே. 5.90.6
891 வாழ்த்த வாயும் நினைக்க
மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த
தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித்
துதியாதே
வீழ்த்த வாவினை
யேன்நெடுங் காலமே. 5.90.7
892 எழுது பாவைநல் லார்திறம்
விட்டுநான்
தொழுது போற்றிநின்
றேனையுஞ் சூழ்ந்துகொண்

டுழுத சால்வழி யேயுழு
வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு
கின்றதே. 5.90.8

893 நெக்கு நெக்கு நினைபவர்
நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன்
னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ
ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தமை
நாணியே. 5.90.9

894 விறகிற் றீயினன் பாலிற்
படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்
சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு
கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன்
னிற்குமே. 5.90.10

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.91 தனி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

895 ஏயி லானையெ னிச்சை
யகம்படிக்
கோயி லானைக்
குணப்பெருங் குன்றினை
வாயி லானை மனோன்மனி
யைப்பெற்ற
தாயி லானைத் தழுவுமென்
ஆவியே. 5.91.1
896 முன்னை ஞான முதற்றனி
வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு
சடையனை
என்னை ஞானத் திருளறுத்
தாண்டவன்

தன்னை ஞானத் தளையிட்டு
வைப்பனே. 5.91.2

897 ஞானத் தாற்றொழு வார்சில
ஞானிகள்
ஞானத் தாற்றொழு
வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்கள்
தொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந்
தொழுவனே. 5.91.3

898 புழுவுக் குங்குணம்
நான்கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனக்
குள்ளபொல் லாங்கில்லை
புழுவி னுங்கடையேன்புனி
தன்றமர்
குழுவுக் கெவ்விடத்
தேன்சென்று கூடவே. 5.91.4

899 மலையே வந்து விழினும்
மனிதர்காள்
நிலையி னின்று கலங்கப்
பெறுதிரேல்

தலைவ னாகிய ஈசன்
றமர்களைக்
கொலைகை யானைதான்
கொன்றிடு கிற்குமே. 5.91.5

900 கற்றுக் கொள்வன வாயுள
நாவுள
இட்டுக் கொள்வன பூவுள
நீருள
கற்றைச் செஞ்சடை
யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி
வுண்பதே. 5.91.6

901 மனிதர் காளிங்கே
வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும்
வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெ
னுங்கனி
இனிது சாலவும் ஏசற்
றவர்கட்கே. 5.91.7

902 என்னை யேதும் அறிந்திலன்

எம்பிரான்
தன்னை நானுமு னேது
மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென்
றறிதலுந்
தன்னை நானும் பிரானென் 5.91.8
றறிந்தெனே.

903 தெள்ளத் தேறித் தெளிந்துதித்
திப்பதோர்
உள்ளத் தேறல் அமுத
ஒளிவெளி
கள்ளத் தேன்கடி யேன்கவ
லைக்கடல்
வெள்ளத் தேனுக்கெவ் வாறு
விளைந்ததே. 5.91.9
இப்பதிகத்தில் 10-ம்
செய்யுள் சிதைந்து
போயிற்று. 5.91.10

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

## 5.92 காலபாராயணம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

904 கண்டு கொள்ளரி யானைக்
கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை
கேட்டிரேல்
கொண்ட பாணி
கொடுகொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத்
துன்னிலுஞ் சூழலே. 5.92.1

905 நடுக்கத் துள்ளும்
நகையுளும் நம்பற்குக்
கடுக்கக் கல்ல வடமிடு
வார்கட்குக்
கொடுக்கக் கொள்க
வெனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப்
பெறீரிங்கு நீங்குமே. 5.92.2

906 கார்கொள் கொன்றைக்

கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவனென்
றரற்றுவார்
ஆர்க ளாகிலு மாக
அவர்களை
நீர்கள் சாரப் பெறீரிங்கு
நீங்குமே. 5.92.3
907 சாற்றி னேன்சடை நீண்முடிச்
சங்கரன்
சீற்றங் காமன்கண்
வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களி பட்ட
மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப்
பார்புடை போகலே. 5.92.4
908 இறையென் சொன்மற
வேல்நமன் றூதுவீர்
பிறையும் பாம்பு
முடைப்பெரு மான்றமர்
நறவம் நாறிய நன்னறுஞ்
சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர்

செல்லலே. 5.92.5

909 வாம தேவன் வளநகர் வைகலுங்
காம மொன்றில ராய்க்கை விளக்கொடு
தாமந் தூபமுந் தண்ணறுஞ் சாந்தமும்
ஏம மும்புனை வாரெதிர் செல்லலே.
5.92.6

910 படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்னம தீசன் அடியரை
விடைகொ ளூர்தியி னானடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே. 5.92.7

911 விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நிச்சல் நீறணி வாரை நினைப்பதே

அச்ச மெய்தி அருகணை
யாதுநீர்
பிச்சை புக்கவன் அன்பரைப்
பேணுமே. 5.92.8

912 இன்னங் கேண்மின்
இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துட
னேத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய
மந்திரந்
தன்னி லொன்றுவல்
லாரையுஞ் சாரலே. 5.92.9

913 மற்றுங் கேண்மின் மனப்பரிப்
பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு
கோவணம்
ஒற்றை யேறுடை யானடியே
யல்லாற்
பற்றொன் றில்லிகள்
மேற்படை போகலே. 5.92.10

அரக்கன் ஈரைந்
914 தலையுமோர் தாளினால்

நெருக்கி யூன்றியிட்
டான்தமர் நிற்கிலுஞ்
சுருக்கெ னாதங்குப்
பேர்மின்கண் மற்றுநீர்
சுருக்கெ னிற்சுட ரான்கழல்
சூடுமே. 5.92.11

திருச்சிற்றம்பலம்

[உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப]

---

## **5.93** மறக்கிற்பனே என்னும் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

915 காச னைக்கன லைக்கதிர்
மாமணித்
தேச னைப்புக ழார்சிலர்
தெண்ணர்கள்
மாசி னைக்கழித் தாட்கொள

வல்லவெம்
ஈச னையினி நான்மறக்
கிற்பனே. 5.93.1
916 புந்திக் குவிளக் காய
புராணனைச்
சந்திக் கண்ணட மாடுஞ்
சதுரனை
அந்தி வண்ணனை ஆரழல்
மூர்த்தியை
வந்தெ னுள்ளங்கொண்
டானை மறப்பனே. 5.93.2
917 ஈசன் ஈசனென் றென்றும்
அரற்றுவன்
ஈசன் றானென் மனத்திற்
பிரிவிலன்
ஈசன் றன்னையு மென்மனத்
துக்கொண்டு
ஈசன் றன்னையும் யான்மறக்
கிற்பனே. 5.93.3
918 ஈசன் என்னை யறிந்த
தறிந்தனன்
ஈசன் சேவடி யேற்றப்

பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப்
பெற்றேனினி
ஈசன் றன்னையும் யான்மறக்
கிற்பனே. 5.93.4

919 தேனைப் பாலினைத்
திங்களை ஞாயிற்றை
வான வெண்மதி சூடிய
மைந்தனை
வேனி லானை மெலிவுசெய்
தீயழல்
ஞான மூர்த்தியை நான்மறக்
கிற்பனே. 5.93.5

920 கன்ன லைக்கரும் பூறிய
தேறலை
மின்ன னைமின் னனைய
வுருவனைப்
பொன்ன னைமணிக் குன்று
பிறங்கிய
என்ன னையினி யான்மறக்
கிற்பனே.

5.93.6

921 கரும்பி னைக்கட்டி
யைக்கந்த மாமலர்ச்
சுரும்பி னைச்சுடர்ச்
சோதியுட் சோதியை
அரும்பி னிற்பெரும்
போதுகொண் டாய்மலர்
விரும்பும் ஈசனை நான்மறக் 5.93.7
கிற்பனே.

922 துஞ்சும் போதுஞ் சுடர்விடு
சோதியை
நெஞ்சுள் நின்று
நினைப்பிக்கு நீதியை
நஞ்சு கண்டத் தடக்கிய
நம்பனை
வஞ்ச னேனினி யான்மறக்
கிற்பனே. 5.93.8

923 புதிய பூவினைப் புண்ணிய
நாதனை
நிதியை நீதியை நித்திலக்
குன்றினைக்
கதியைக் கண்டங் கறுத்த
கடவுளை

மதியை மைந்தனை
நான்மறக் கிற்பனே. 5.93.9

924 கருகு கார்முகில்
போல்வதோர் கண்டனை
உருவ நோக்கியை ஊழி
முதல்வனைப்
பருகு பாலனைப் பான்மதி
சூடியை
மருவு மைந்தனை நான்மறக்
கிற்பனே.
5.93.10

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.94** தொழற்பாலனம் என்னும் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

925 அண்டத் தானை அமரர்

தொழப்படும்
பண்டத் தானைப் பவித்திர
மாந்திரு
முண்டத் தானைமுற் றாத
இளம்பிறைத்
துண்டத் தானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.1

926 முத்தொப் பானை
முளைத்தெழு கற்பக
வித்தொப் பானை
விளக்கிடை நேரொளி
ஒத்தொப் பானை ஒளிபவ
ளத்திரள்
தொத்தொப் பானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.2

927 பண்ணொத் தானைப் பவளந்
திரண்டதோர்
வண்ணத் தானை வகையுணர்
வான்றனை
எண்ணத் தானை இளம்பிறை
போல்வெள்ளைச்
சுண்ணத் தானைக்கண்

டீர்தொழற் பாலதே. 5.94.3

928 விடலை யானை விரைகமழ்
தேன்கொன்றைப்
படலை யானைப் பலிதிரி
வான்செலும்
நடலை யானை நரிபிரி
யாததோர்
சுடலை யானைக்கண்
டீர்தொழற் பாலதே.
5.94.4

929 பரிதி யானைப்பல் வேறு
சமயங்கள்
கருதி யானைக்கண்
டார்மனம் மேவிய
பிரிதி யானைப் பிறரறி
யாததோர்
சுருதி யானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.5

930 ஆதி யானை அமரர்
தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை உணர்தற்

கரியதோர்
சோதி யானைக்கண் 5.94.6
டீர்தொழற் பாலதே.
931 ஞாலத் தானைநல்
லானைவல் லார்தொழுங்
கோலத் தானைக்
குணப்பெருங் குன்றினை
மூலத் தானை முதல்வனை
மூவிலைச்
சூலத் தானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.7
932 ஆதிப் பாலட்ட மூர்த்தியை
ஆனஞ்சும்
வேதிப் பானைநம்
மேல்வினை வெந்தறச்
சாதிப் பானைத் தவத்திடை
மாற்றங்கள்
சோதிப் பானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.8
933 நீற்றி னானை நிகரில்வெண்
கோவணக்
கீற்றி னானைக் கிளரொளிச்

செஞ்சடை
ஆற்றி னானை அமரர்தம்
ஆருயிர்
தோற்றி னானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.9

934 விட்டிட் டானைமெய்ஞ்
ஞானத்து மெய்ப்பொருள்
கட்டிட் டானைக் கனங்குழை
பாலன்பு
பட்டிட் டானைப் பகைத்தவர்
முப்புரஞ்
சுட்டிட் டானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.10

935 முற்றி னானை இராவணன்
நீண்முடி
ஒற்றி னானை ஒருவிர
லாலுறப்
பற்றி னானையோர்
வெண்டலைப் பாம்பரைச்
சுற்றி னானைக்கண்
டீர்தொழற் பாலதே. 5.94.11

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.95** இலிங்கபுராணம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

936 புக்க ணைந்து புரிந்தல
ரிட்டிலர்
நக்க ணைந்து நறுமலர்
கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி
வண்ணனை
மிக்குக் காணலுற் றாரங்
கிருவரே. 5.95.1

937 அலரு நீருங்கொண் டாட்டித்
தெளிந்திலர்
திலக மண்டலந் தீட்டித்
திரிந்திலர்

உலக மூர்த்தி யொளிநிற
வண்ணனைச்
செலவு காணலுற் றாரங் 5.95.2
கிருவரே.
938 ஆப்பி நீரோ டலகுகைக்
கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து
சுமந்திலர்
காப்புக் கொள்ளி கபாலிதன்
வேடத்தை
ஒப்பிக் காணலுற் றாரங்
கிருவரே.
5.95.3
939 நெய்யும் பாலுங்கொண்
டாட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும்
போக்கிப் புகழ்ந்திலர்
ஐயன் வெய்ய அழல்நிற
வண்ணனை
மெய்யைக் காணலுற் றாரங்
கிருவரே. 5.95.4
940 எருக்கங் கண்ணிகொண்

டிண்டை புனைந்திலர்
பெருக்கக் கோவணம் பீறி
யுடுத்திலர்
தருக்கி னாற்சென்று
தாழ்சடை யண்ணலை
நெருக்கிக் காணலுற் றாரங் 5.95.5
கிருவரே.

941 மரங்க ளேறி மலர்பறித்
திட்டிலர்
நிரம்ப நீர்சுமந் தாட்டி
நினைந்திலர்
உரம்பொ ருந்தி யொளிநிற
வண்ணனை
நிரம்பக் காணலுற் றாரங்
கிருவரே. 5.95.6

942 கட்டு வாங்கங் கபாலங்கைக்
கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி
வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்றெய்திக்
காணிய
பட்ட கட்டமுற் றாரங்

கிருவரே. 5.95.7

943 வெந்த நீறு விளங்க
அணிந்திலர்
கந்த மாமலர் இண்டை
புனைந்திலர்
எந்தை ஏறுகந் தேறெரி
வண்ணனை
அந்தங் காணலுற் றாரங்
கிருவரே. 5.95.8

944 இளவெ ழுந்த இருங்குவ
ளைம்மலர்
பிளவு செய்து பிணைத்தடி
யிட்டிலர்
களவு செய்தொழிற்
காமனைக் காய்ந்தவன்
அளவு காணலுற் றாரங்
கிருவரே. 5.95.9

945 கண்டி பூண்டு கபாலங்கைக்
கொண்டிலர்
விண்ட வான்சங்கம்
விம்மவாய் வைத்திலர்
அண்ட மூர்த்தி அழல்நிற

வண்ணனைக்
கெண்டிக் காணலுற் றாரங் 5.95.10
கிருவரே.

946 செங்க ணானும் பிரமனுந்
தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர்
காண்கிலார்
இங்குற் றேனென்றி
லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப்
புண்ணிய மூர்த்தியே. 11 5.95.11

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.96** மனத்தொகை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

947 பொன்னுள் ளத்திரள்

புன்சடை யின்புறம்
மின்னுள் ளத்திரள்
வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்தருள்
கொண்டிருள் நீங்குதல்
என்னுள் ளத்துள தெந்தை
பிரானிரே. 5.96.1

948 முக்க ணும்முடை யாய்முனி
கள்பலர்
தொக்கெ ணுங்கழ லாயொரு
தோலினோ
டக்க ணும்மரை யாயரு
ளெய்தலா
தெக்க ணும்மிலன் எந்தை
பிரானிரே.
5.96.2

949 பனியாய் வெங்கதிர்
பாய்படர் புன்சடை
முனியாய் நீயுல கம்முழு
தாளினுந்
தனியாய் நீசரண் நீசல
மேபெரி

தினியாய் நீயெனக் கெந்தை பிரானிரே. 5.96.3

950 மறையும் பாடுதிர் மாதவர் மாலினுக்
குறையு மாயினை கோளர வோடொரு
பிறையுஞ் சூடினை யென்பத லாற்பிறி
திறையுஞ் சொல்லிலை எந்தை பிரானிரே. 5.96.4

951 பூத்தார் கொன்றையி னாய்புலி யின்னதள்
ஆர்த்தா யாடர வோடன லாடிய
கூத்தா நின்குரை யார்கழ லேயல
தேத்தா நாவெனக் கெந்தை பிரானிரே.
5.96.5

952 பைம்மா லும்மர வாபர மாபசு
மைம்மால் கண்ணியோ

டேறுமைந் தாவெனும்
அம்மா லல்லது மற்றடி
நாயினேற்
கெம்மா லும்மிலன் எந்தை
பிரானிரே. 5.96.6

953 வெப்பத் தின்மன மாசு
விளக்கிய
செப்பத் தாற்சிவ னென்பவர்
தீவினை
ஒப்பத் தீர்த்திடும் ஒண்கழ
லாற்கல்ல
தெப்பற் றும்மிலன் எந்தை
பிரானிரே. 5.96.7

954 திகழுஞ் சூழ்சுடர் வானொடு
வைகலும்
நிகழு மொண்பொரு ளாயின
நீதியென்
புகழு மாறு மலானுன
பொன்னடி
இகழு மாறிலன் எந்தை
பிரானிரே. 5.96.8

955 கைப்பற் றித்திரு மால்பிர

மன்னுனை
எப்பற் றியறி தற்கரி
யாயருள்
அப்பற் றல்லது மற்றடி
நாயினேன்
எப்பற் றும்மிலன் எந்தை
பிரானிரே. 5.96.9

956 எந்தை யெம்பிரான் என்றவர்
மேல்மனம்
எந்தை யெம்பிரான்
என்றிறைஞ் சித்தொழு
தெந்தை யெம்பிரான் என்றடி
யேத்துவார்
எந்தை யெம்பிரான் என்றடி
சேர்வரே. 5.96.10

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## 5.97 சித்தத்தொகை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

957 சிந்திப் பார்மனத் தான்சிவன்
செஞ்சுடர்
அந்தி வானிறத் தானணி
யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி
னானடி
வந்திப் பாரவர் வானுல
காள்வரே. 5.97.1

958 அண்ட மாரிரு ளூடு
கடந்தும்பர்
உண்டு போலுமோ
ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி
வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி
வேதியன் என்பரே. 5.97.2

959 ஆதி யாயவ னாரு
மிலாதவன்
போது சேர்புனை நீண்முடிப்
புண்ணியன்

பாதி பெண்ணுரு வாகிப்
பரஞ்சுடர்ச்
சோதி யுட்சோதி யாய்நின்ற
சோதியே. 5.97.3

960 இட்ட திட்டதோ ரேறுகந்
தேறியூர்
பட்டி துட்டங்க னாய்ப்பலி
தேர்வதோர்
கட்ட வாழ்க்கைய னாகிலும்
வானவர்
அட்ட மூர்த்தி யருளென்
றடைவரே. 5.97.4

961 ஈறில் கூறைய னாகி
எரிந்தவெண்
ணீறு பூசி நிலாமதி சூடிலும்
வீறி லாதன செய்யினும்
விண்ணவர்
ஊற லாயரு ளாயென்
றுரைப்பரே. 5.97.5

962 உச்சி வெண்மதி சூடிலும்
ஊனறாப்
பச்சை வெண்டலை யேந்திப்

பலஇலம்
பிச்சை யேபுகு மாகிலும் வானவர்
அச்சந் தீர்த்தரு ளாயென் றடைவரே. 5.97.6

963 ஊரி லாயென்றொன் றாக வுரைப்பதோர்
பேரி லாய்பிறை சூடிய பிஞ்ஞகா
காரு லாங்கண்ட னேயுன் கழலடி
சேர்வி லார்கட்குத் தீயவை தீயவே. 5.97.7

964 எந்தை யேயெம் பிரானே யெனவுள்கிச்
சிந்திப் பாரவர் தீவினை தீருமால்
வெந்த நீறுமெய் பூசிய வேதியன்
அந்த மாவளப் பாரடைந் தார்களே. 5.97.8

965 ஏன வெண்மருப் போடென்பு
பூண்டெழில்
ஆனை யீருரி போர்த்தன
லாடிலுந்
தான வண்ணத்த னாகிலுந்
தன்னையே
வான நாடர் வணங்குவர்
வைகலே. 5.97.9

966 ஐயன் அந்தணன் ஆணொடு
பெண்ணுமாம்
மெய்யன் மேதகு
வெண்பொடிப் பூசிய
மைகொள் கண்டத்தன்
மான்மறிக் கையினான்
பைகொள் பாம்பரை யார்த்த
பரமனே. 5.97.10

967 ஒருவ னாகிநின் றானிவ்
வுலகெலாம்
இருவ ராகிநின் றார்கட்
கறிகிலான்
அருவ ராவரை ஆர்த்தவ
னார்கழல்

பரவு வாரவர் பாவம்
பறையுமே. 5.97.11

968 ஓத வண்ணனும் ஒண்மலர்ச்
செல்வனும்
நாத னேயரு ளாயென்று
நாடொறுங்
காதல் செய்து கருதப்
படுமவர்
பாத மேத்தப் பறையுநம்
பாவமே. 5.97.12

969 வ தன்மை யவரவ
ராக்கையான்
வெவ்வ தன்மைய னென்ப
தொழிமினோ
மௌவல் நீண்மலர் மேலுறை
வானொடு
பௌவ வண்ணனு
மாய்ப்பணி வார்களே. 5.97.13

970 அக்கும் ஆமையும் பூண்டன
லேந்திஇல்
புக்குப் பல்பலி தேரும்
புராணனை

நக்கு நீர்கள் நரகம்
புகேன்மினோ
தொக்க வானவ ராற்றொழு
வானையே. 5.97.14

971 கங்கை தங்கிய செஞ்சடை
மேலிளந்
திங்கள் சூடிய தீநிற
வண்ணனார்
இங்க ணாரெழில் வானம்
வணங்கவே
அங்க ணாற்கது வாலவன்
தன்மையே. 5.97.15

972 நகர வெல்கொடி யானொடு
நன்னெஞ்சே
நுகர நீயுனைக் கொண்டுயப்
போக்குறில்
மகர வெல்கொடி
மைந்தனைக் காய்ந்தவன்
புகரில் சேவடி யேபுக
லாகுமே. 5.97.16

973 சரண மாம்படி யார்பிற
ரியாவரோ

கரணந் தீர்த்துயிர் கையி
லிகழ்ந்தபின்
மரண மெய்திய பின்னவை
நீக்குவான்
அரண மூவெயி லெய்தவ
னல்லனே. 5.97.17

974 ஞமனென் பான்நர கர்க்கு
நமக்கெலாஞ்
சிவனென் பான்செழு
மான்மறிக் கையினான்
கவனஞ் செய்யுங் கனவிடை
யூர்தியான்
தமரென் றாலுங் கெடுந்தடு
மாற்றமே. 5.97.18

975 இடப மேறியும் இல்பலி
யேற்பவர்
அடவி காதலித் தாடுவர்
ஐந்தலைப்
படவம் பாம்பரை யார்த்த
பரமனைக்
கடவி ராய்ச்சென்று
கைதொழு தும்மினே. 5.97.19

976 இணர்ந்து கொன்றைபொற்
றாது சொரிந்திடும்
புணர்ந்த வாளர வம்மதி
யோடுடன்
அணைந்த அஞ்சடை
யானவன் பாதமே
உணர்ந்த உள்ளத் தவருணர்
வார்களே. 5.97.20

977 தருமந் தான்றவந் தான்றவத்
தால்வருங்
கருமந் தான்கரு மான்மறிக்
கையினான்
அருமந் தன்ன அதிர்கழல்
சேர்மினோ
சிரமஞ் சேரழல் தீவினை
யாளரே. 5.97.21

978 நமச்சி வாயவென் பாருள
ரேலவர்
தமச்ச நீங்கத் தவநெறி
சார்தலால்
அமைத்துக் கொண்டதோர்

வாழ்க்கைய னாகிலும்
இமைத்து நிற்பது சால 5.97.22
அரியதே.

979 பற்பல் காலம் பயிற்றிப்
பரமனைச்
சொற்பல் காலம்நின்
றேத்துமின் தொல்வினை
வெற்பில் தோன்றிய
வெங்கதிர் கண்டவப்
புற்ப னிக்கெடு மாறது
போலுமே. 5.97.23

980 மணிசெய் கண்டத்து
மான்மறிக் கையினான்
கணிசெய் வேடத்தர் ஆயவர்
காப்பினாற்
பணிகள் தாஞ்செய வல்லவர்
யாவர்தம்
பிணிசெய் யாக்கையை
நீக்குவர் பேயரே. 5.97.24

981 இயக்கர் கின்னரர் இந்திரன்
தானவர்
நயக்க நின்றவன் நான்முகன்

ஆழியான்
மயக்க மெய்தவன் மாலெரி
யாயினான்
வியக்குந் தன்மையி
னானெம் விகிர்தனே. 5.97.25

982 அரவ மார்த்தன லாடிய
அண்ணலைப்
பரவு வாரவர் பாவம்
பறைதற்குக்
குரவை கோத்தவ னுங்குளிர்
போதின்மேல்
கரவில் நான்முக னுங்கரி
யல்லரே. 5.97.26

983 அழலங் கையினன் அந்தரத்
தோங்கிநின்
றுழலும் மூவெயில் ஒள்ளழ
லூட்டினான்
தழலுந் தாமரை யானொடு
தாவினான்
கழலுஞ் சென்னியுங்
காண்டற் கரியனே. 5.97.27

984 இளமை கைவிட் டகறலும் மூப்பினார்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்
உளமெ லாமொளி யாய்மதி ஆயினான்
கிளமை யேகிளை யாக நினைப்பனே. 5.97.28

985 தன்னிற் றன்னை அறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை அறியிற் றலைப்படுந்
தன்னிற் றன்னை அறிவில னாயிடிற்
தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே. 5.97.29

986 இலங்கை மன்னனை ஈரைந்து பத்துமன்
றலங்க லோடுட னேசெல ஊன்றிய
நலங்கொள் சேவடி நாடொறும் நாடொறும்

வலம்கொண் டேத்துவார்
வானுல காள்வரே. 5.97.30

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

## **5.98** உள்ளம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

987 நீற லைத்ததோர் மேனி
நிமிர்சடை
ஆற லைக்கநின் றாடும்
அமுதினைத்
தேற லைத்தெளி யைத்தெளி
வாய்த்ததோர்
ஊற லைக்கண்டு
கொண்டதெ னுள்ளமே. 5.98.1

988 பொந்தை யைப்புக்கு நீக்கப்
புகுந்திடுந்

தந்தை யைத்தழல்
போல்வதோர் மேனியைச்
சிந்தை யைத்தெளி
வைத்தெளி வாய்த்ததோர்
எந்தை யைக்கண்டு 5.98.2
கொண்டதெ னுள்ளமே.

989 வெள்ளத் தார்விஞ்சை
யார்கள் விரும்பவே
வெள்ளத் தைச்சடை வைத்த
விகிர்தனார்
கள்ளத் தைக்கழி யம்மன
மொன்றிநின்
றுள்ளத் தில்லொளி
யைக்கண்ட துள்ளமே. 5.98.3

990 அம்மா னையமு தின்னமு
தேயென்று
தம்மா னைத்தத்து வத்தடி
யார்தொழுஞ்
செம்மா னநிறம்
போல்வதோர் சிந்தையுள்
எம்மா னைக்கண்டு
கொண்டதெ னுள்ளமே. 5.98.4

991 கூறே றும்முமை பாகமோர்
பாலராய்
ஆறே றுஞ்சடை மேற்பிறை
சூடுவர்
பாறே றுந்தலை யேந்திப்
பலஇலம்
ஏறேறு மெந்தையைக்
கண்டதெ னுள்ளமே. 5.98.5
992 முன்னெஞ் சம்மின்றி
மூர்க்கராய்ச் சாகின்றார்
தன்னெஞ் சந்தமக் குத்தாம்
இலாதவர்
வன்னெஞ் சம்மது நீங்குதல்
வல்லிரே
என்னெஞ்சி லீசனைக்
கண்டதெ னுள்ளமே. 5.98.6
993 வென்றா னைப்புல
னைந்துமென் தீவினை
கொன்றா னைக்குணத் தாலே
வணங்கிட
நன்றா நன்மனம் வைத்திடு
ஞானமாம்

ஒன்றா னைக்கண்டு
கொண்டதெ னுள்ளமே. 5.98.7

994 மருவி னைமட நெஞ்சம்
மனம்புகுங்
குருவி னைக்குணத் தாலே
வணங்கிடுந்
திருவி னைச்சிந்தை யுட்சிவ
னாய்நின்ற
உருவி னைக்கண்டு
கொண்டதெ னுள்ளமே. 5.98.8

995 தேச னைத்திரு மால்பிர
மன்செயும்
பூச னைப்புண ரிற்புணர்
வாயதோர்
நேச னைநெஞ்சி னுள்நிறை
வாய்நின்ற
ஈச னைக்கண்டு கொண்டதெ
னுள்ளமே. 5.98.9

996 வெறுத்தா னைம்புல னும்பிர
மன்றலை
அறுத்தா னையரக் கன்கயி

லாயத்தைக்
கறுத்தா னைக்கா லில்விர
லொன்றினால்
ஒறுத்தா னைக்கண்டு
கொண்டதெ னுள்ளமே. 5.98.10

திருச்சிற்றம்பலம்

*உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப*

---

## **5.99** பாவநாசம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

997 பாவ மும்பழி பற்றற
வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடு
மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந்
துள்குமின்

காவ லாளன் கலந்தருள்
செய்யுமே. 5.99.1

998 கங்கை யாடிலென் காவிரி
யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை
யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ
ராடிலென்
எங்கு மீசனெ னாதவர்க்
கில்லையே. 5.99.2

999 பட்ட ராகிலென் சாத்திரங்
கேட்கிலென்
இட்டு மட்டியு மீதொழில்
பூணிலென்
எட்டு மொன்றும் இரண்டு
மறியிலென்
இட்ட மீசனெ னாதவர்க்
கில்லையே.
5.99.3

1000 வேத மோதிலென்
வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல்

பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறும்
உணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி 5.99.4
இல்லையே.
1001 காலை சென்று கலந்துநீர்
மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி
நிற்கிலென்
ஆலை வேள்வி யடைந்தது
வேட்கிலென்
ஏல ஈசனென் பார்க்கன்றி
இல்லையே. 5.99.5
1002 கான நாடு கலந்து
திரியிலென்
ஈன மின்றி இருந்தவஞ்
செய்யிலென்
ஊனை யுண்டல் ஒழிந்துவா
னோக்கிலென்
ஞான னென்பவர்க்
கன்றிநன் கில்லையே.
5.99.6

1003 கூட வேடத்த ராகிக்
குழுவிலென்
வாடி யூனை வருத்தித்
திரியிலென்
ஆடல் வேடத்தன் அம்பலக்
கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பயன் 5.99.7
இல்லையே.
1004 நன்று நோற்கிலென்
பட்டினி யாகிலென்
குன்ற மேறி யிருந்தவஞ்
செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத்
திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி
இல்லையே. 5.99.8
1005 கோடித் தீர்த்தங் கலந்து
குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன்
பில்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக்
குடத்தட்டி

மூடி வைத்திட்ட
மூர்க்கனோ டொக்குமே. 5.99.9

1006 மற்று நற்றவஞ் செய்து
வருந்திலென்
பொற்றை யுற்றெடுத்
தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற்
சேவடி
பற்றி லாதவர்க் குப்பயன்
இல்லையே. 5.99.10

திருச்சிற்றம்பலம்

[உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப]

---

## 5.100 ஆதிபுராணம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

1007 வேத நாயகன் வேதியர்
நாயகன்

மாதின் நாயகன் மாதவர்
நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை
நாயகன்
பூத நாயகன் புண்ணிய
மூர்த்தியே. 5.100.1

1008 செத்துச் செத்துப்
பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட்
கேறுமோ
அத்த னென்றரி யோடு
பிரமனுந்
துத்தி யஞ்செய நின்றநற்
சோதியே. 5.100.2

1009 நூறு கோடி பிரமர்கள்
நொந்தினார்
ஆறு கோடி நாராயண
ரங்ஙனே
ஏறு கங்கை
மணலெண்ணில் இந்திரர்
ஈறி லாதவன் ஈசன்
ஒருவனே. 5.100.3

1010 வாது செய்து மயங்கு
மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும்
ஏழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு
வார்க் கெல்லாம்
மாதே வனலாற் றேவர்மற்
றில்லையே. 5.100.4

1011 கூவ லாமை குரைகட
லாமையைக்
கூவ லோடொக்கு மோகட
லென்றல்போற்
பாவ காரிகள் பார்ப்பரி
தென்பராற்
தேவ தேவன்
சிவன்பெருந் தன்மையே.
5.100.5

1012 பேய்வ னத்தமர்
வானைப்பி ரார்த்தித்தார்க்
கீவ னையிமை யோர்முடி
தன்னடிச்
சாய்வ னைச்சல வார்கள்

தமக்குடற்
சீவ னைச்சிவ னைச்சிந்தி 5.100.6
யார்களே.
1013 எரிபெ ருக்குவர்
அவ்வெரி ஈசன
துருவ ருக்கம தாவ
துணர்கிலார்
அரிய யற்கரி யானை
அயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர்
நாடரே. 5.100.7
1014 அருக்கன் பாதம்
வணங்குவர் அந்தியில்
அருக்க னாவான் அரனுரு
வல்லனோ
இருக்கு நான்மறை ஈசனை
யேதொழுங்
கருத்தி னைநினை
யார்கன் மனவரே.
5.100.8
1015 தாயி னும்நல்ல சங்கர
னுக்கன்பர்

ஆய வுள்ளத் தமுதருந்
தப்பெறார்
பேயர் பேய்முலை
யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட
மனத்தரே. 5.100.9

1016 அரக்கன் வல்லரட்
டாங்கொழித் தாரருள்
பெருக்கச் செய்த
பிரான்பெருந் தன்மையை
அருத்தி செய்தறி யப்பெறு
கின்றிலர்
கருத்தி லாக்கய வக்கணத்
தோர்களே. 5.100.10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த
தேவாரப்பதிகங்கள்
ஐந்தாம் திருமுறை முற்றும்.

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

This webpage was last updated on 9 Sept 2003

Please send your comments to the webmasters of this website.